# திராவிடநாடு

9-4-61 வார வெளியீடு விலை 16 காசு


# விடுதலை பெறுவோம்!

[தி. வே. திருமாறன்]

ஒருதொழில் கொண்டே—உலகில்
ஒருவரின் துணையும்—இன்றி
பெருமையில் குறையா—வண்ணம்
பிழைத்திடும் நாடுகள் பலவாம்!

கண்ணுடித் தொழில்தனை—பெல்சியம்
கண்ணே போல்காத்து—உலகில்
பொன்னுன வாழ்வுதனை—எய்தி
பெருமைப் படவாழ்ந் திருக்க!

எண்ணெய்க் கிணறுகளே—நமது
ஏற்றத்தின் துணைவர்கள்—என்று
எண்ணியே உயிர்வாழும்—சவூதி
ஈரான் விடுதலையோ டிருக்க!

செம்பும் பித்தளையும்—நம்மை
செழிக்க வைக்கும்—என்று
சிங்கம் போல்வாழும்—சிலி
செருக்கோ டுதனித் திருக்க!

வேளாண்மை யொன்றையே—தனது
வேதனை தீர்த்திடும்—உயிர்(த்)
தோழனென் றேநம்பி—பூட்டான்
தெம்போ டுலகிலி ருக்க!

செல்வம் யாவும்—பெற்ற
செந்தேன் திராவிடம்—விடுதலை
இல்லாது சாவதோ?—தோழா!
இடிஎனஎழு விடுதலை பெறவே!

# ஈர நெஞ்சம்

மழையா அது? பெருமழை. காற்றா அது? கடுங்காற்று. மின்னலா அது? திடீர், திடீர் என்று பாய்ந்து மனிதனுடைய உயிர் குடிக்கவந்த பெருமின்னாற்றல். அந்தப் பெருமழையில், கடுங்காற்றில், பெருமின்னலில் நடந்துகொண்டிருந்தான் மருதன். அவன் நடந்து வந்த ஒற்றையடிப்பாதை அந்தக் கொடிய மையிருளில் மறைந்து புதையுண்டுகிடந்தது. அது அவனை எங்கே கொண்டுபோய்விடும் என்று அறிந்திருந்தும், அவ்வேளை அவன் அதை அறியாதவனாகித், தடுமாறித் தத்தளித்தான். தடவித்தடவி நடந்தான். தவழ்ந்து, தவழ்ந்து சென்றான். பல இடங்களில் மழைநீரும், களிமண்ணும் சேர்ந்து உண்டாக்கிவிட்ட வழுக்கல்களில் எதிர்பாராத விதத்தில் வழுக்கிவிழுந்து, விழுந்து, எழுந்து, திரும்பவும் தடவித்தடவி நடந்துகொண்டிருந்தான். ஆள் அண்டாத காடு அல்ல அந்தப் பகுதி. பகல் வேளையில் பல்லோர் நடமாடி, உழைக்கும் கழனிகளும், கொல்லைகளும் நிறைந்த செழிப்பான, வளங்கொழிக்கும் நிலப்பகுதி தான் அது. ஆனால், அவ்வேளை அங்கே ஒரு நாய் நரியைக்கூடக் காணோம்.

மூன்று கல் தூரம் நடந்துவந்துவிட்டான் அவன். இன்னும் ஐந்து கல்லாவது நடந்து தீரவேண்டும், அவன் போகவேண்டிய இடத்தை அடையவேண்டுமானால். மழைக்காக அவன் தலையில்போட்டுக் கொண்டிருந்த அந்தக் கிழிந்த கோணி கணத்துக்குக் கணம் கனம் ஏறிக்கொண்டு வந்தது—மழை நீரால் ஊறி ஊறி. அவன் இடையில் [illegible] துகட்டிக்கொண்டிருந்த [illegible] வேட்டி என்றும், தோளில் போட்டுக்கொண்டிருந்ததால் துண்டு என்[illegible] பெயர்பெற்றுவிட்ட கந்தல்கள[illegible] தலையிலிருந்த கோணியின் [illegible]. உடல் எல்லாம் தெப்பலாகிவிட்டது. அந்தக் கந்தற் கோணியும், வேட்டியும், துண்டும் ஈரப் பெருஞ்சுமையாகி விட்டன. உடல் வெடவெடவென்று ஆடியது. கால்கள் தள்ளாடின. அடிக்கொரு முறை பளிச் பளிச் என்று விளாசிக்கொண்டிருந்த மின்னல் வீச்சால் கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரு கணம் அவனுக்கு நன்றாகத் தெரிந்தது. அங்கே அருகில் ஒரு குடிசில் கிடையாது, என்று அவன் ஏற்கெனவே தெரிந்திருந்ததை அது உறுதிப்படுத்திற்று.

இயற்கை ஆற்றலை எதிர்த்துப் போராடிப் போராடி அவன் நடந்து கொண்டிருந்தான். மேலும் மேலும் மின்னல் வெட்டிக்கொண்டிருந்தது. அதோ தெரிகிறதே அந்தப் பெரிய வீடு—சற்றுத் தொலைவில்! ஓகோ, நான்கு கல் வந்துவிட்டேனா? அந்தப் பெரிய வீட்டோடு இந்த ஒற்றையடிப் பாதை ஒழியும். ஓரளவு சாலையை அடைந்துவிடலாம். அந்தச் சாலை மட்டும் என்ன வாழப்போகிறது!

### ❋ கனசு ❋

அதுவும் இந்த வேளையில் வழுக்கல் காடாகத்தான் மாறிக்கிடக்கும்! எப்படியோ, அதில் நடந்து செல்வது அவ்வளவு சிரமம் இல்லை. தட்டுத் தடுமாறிக்கொண்டு போய்விடலாம். ஆனாலும், இந்த மழையும், காற்றும், இடியும் ஓயவில்லையே! அப்பப்பா, முடியாது, முடியாது. இப்போதே உடம்பு மரத்துக்கொண்டுவருகிறது. இன்னும் சற்று நேரத்தில் உணர்வும் மரக்கத் தொடங்கும். அப்புறம் உயிரும் மரக்கத் தொடங்கும்; மரத்துப்போகும். கடைசியில், செல்ல வேண்டிய இ[illegible]ந்தைச் சென்றடையு முன்னே நடுவழியில்செத்துக்கிடக்க வேண்டியதுதான்—ஏன், சாவு ஏன் [illegible]ருல், பயமாக இருக்கின்றதா?—பயமாவது! என்னைப்போன்றவர்கள் இந்த உலகில்—இல்லை, நாட்டில்—இப்படி உலவவேண்டிய நிலையுள்ளதுபற்றியல்லவா அஞ்சவேண்டும். பிறகு? ஏதோ இருக்கவேண்டிய காலம் மட்டும் இருந்துவிட்டுப் போவோமே! நாம் ஏன் வலியப் போய்ச் சாவை அணைத்துக் கொள்ளவேண்டும்!

அந்த வீட்டருகில் அவன் வந்துவிட்டான். இனி, அங்கே போய்ப் படுத்துக்கொள்ளவேண்டியதுதான். விரு விரு என்று அவன் நடந்தான். வீட்டை நெருங்கினான். அவ்வளவுதான், திண்ணைமீது படுத்துக் கிடந்த நாய் ஒன்று முதலில் உறுமி, பின்னர் பேரோலமிட்டுக் குரைக்கத் தொடங்கியது. அந்த நடுக்கூற்று வேளையில் நாயின் குரைப்பொலி பேரச்சத்தை அவன்பால் நிறைத்துக் காட்டிற்று. என்றாலும், மருதன் ஓடவில்லை. வாயிலருகிலேயே நின்றுகொண்டான். நாயும் திண்ணையைவிட்டுக் கீழே இறங்கவில்லை. அது விலங்கென்றாலும், உயிருள்ளதுதானே! மழையில் நனைய விரும்புமா? ஆனால், குரைத்துக்கொண்டே இருந்தது.

மருதன் காத்து நின்றான். அவனுக்குத் தெரியும், நாயை அமைதிப்படுத்தித் திண்ணையில் ஏறிப் படுத்துக்கொள்வது அரிய செயல் அல்லவென்பது. அது குரைத்துக் குரைத்துத் தானே ஓய்ந்துவிடும். அந்த நிலையை அவன் எதிர்பார்த்துக் கொண்டு நின்றான்.

மழை குறையவில்லை. பெய்துகொண்டிருந்தது. அதில் மருதன் நனைந்துகொண்டே நின்றான்.

திடீரென்று அந்த வீட்டின் கதவு திறந்துகொண்டது. நாய் பின்னும் உரக்கக் குரைக்கத் தொடங்கியது.

(4-ம் பக்கம் பார்க்க)

# வேலியே பயிரை மேய்ந்தால்...!

19] ஆண்டு சந்தா ரூ. 8 (9—4—61) தனிப்பிரதி 16 காசு [ இதழ் 37

நாட்டை ஆபத்திலிருந்து காக்க ஏற்பட்டது—ஏற்படுத்தப்பட்டது பாதுகாப்புத்துறை. இந்தத்துறையின் நிருவாகத்தில் நடைபெற்றுள்ள முறைகேடுகளைப்பற்றி அண்மையில் செய்திகள் வெளிவந்துள்ளன. தலைமைத் தணிக்கையாளர், முன்பு பலதடவை இப்படிப்பட்ட குறைகளை எடுத்துக்காட்டினர். ஆனாலும் குறைகளையப்படவில்லை. திறமைவெளிப்படவில்லை. இம்முறை, அவர் சுட்டிக்காட்டியுள்ள சில கேடுகளைக் காண்போம்:

1952-ல் மிக அவசரமாகத் தேவைப்படுகிறது என்று 38·30-இலட்ச ரூபா விலையில் ஒரு கப்பல் வாங்கினராம். 'அவசரத் தேவைக்காக' என்று வாங்கப்பட்ட அது 1959-ல் தான் பயன்படுத்தப்பட்டது! இதற்கிடையில் 44-லட்சரூபா அதே கப்பலில் செலவாகியுள்ளது!

1950-ல் எஃகுப்பட்டறை ஒன்று அமைப்பதற்காக 8·35-இட்சரூபா ஒதுக்கப்பட்டது. ஆனல், பட்டறையோ இன்னும் வேலைதுவங்கவில்லை. அனுபவம் இல்லாமையே, காரணம் எனக் காட்டியுள்ளார் தணிக்கையாளர்.

ஏறத்தாழ 308-கல் தொலைவுள்ள பாதைகள் அமைக்க 1952-ல் 304·47-இலட்சரூபா அனுமதிக்கப்பட்டதாம். 1958-ல் 392·64-இலட்ச ரூபா செலவில் 98-கல் தொலைவுள்ள பாதையைப் போட்டு முடித்துவிட்டது! அதாவது, முழு வேலைக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகையைவிட 88-இலட்ச ரூபா அதிக செலவுசெய்து, மூன்றில் ஒருபங்கு வேலையை 'வெற்றியோடு' முடித்துள்ளது.

வெடி மருந்துகள் வைக்கும் பெட்டிகள் செய்வதற்கான தொழிற்சாலை ஒன்று அமைக்க என்று சுமார் 20-இலட்சம் ரூபா செலவானபிறகு, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது!

இவையே அல்லாமல், வெடிமருந்து வகைகளையும் இதர சாமான்களையும் சரியாகப் பத்திரப்படுத்தாமல் பாதகம் அடையவிட்டது, மிக அதிகமான விலையில் சாமான்கள் வாங்கியது போன்ற வேறு சில விவேகமற்ற செயல்களும் நடைபெற்றிருக்கின்றன.

29,000-சதுர அடி இடத்தை ஒரு முன்னாள் இராணுவ அதிகாரி மாதம் ஒன்றுக்கு ஒன்றரை ரூபா வாடகைக்குப் பெற்றிருக்கிறார்.

வேறு ஒரு தனிப்பட்ட நபர் தன் தொழிற்சாலைக்காக 4000-சதுர அடி நிலத்தை மாதம் ஒரு ரூபா வாடகையில் பெற்றுள்ளார்.

வெளிவந்துள்ள குறிப்புக்களில் சிலவே இவை. இன்னும் வெளிவர இயலாதவை எத்தனையோ?

பாதுகாப்புத்துறை வேறு எதைப் பாதுகாக்கின்றதோ இல்லையோ, பணத்தையேனும் ஒழுங்காகப் பாதுகாத்திருக்கலாம். ஆனல், அதன் நிருவாகமோ பணம் எங்கோ சுரங்கத்திலிருந்து ஊற்றாக வெளிப்படுகிறது என்று கருதி, அதனைத் தண்ணீரைப்போலத் தாராளமாகச் செலவுசெய்துள்ளது. தாராளமாகமட்டும் அல்ல, தான்தோன்றியவிதமெல்லாம் வாரி இறைத்திருக்கிறது. ஏழையர் வியர்வை, வரியாக வந்து சேர்ந்த பணம் இது என்ற எண்ணம் இருந்திருந்தால் இந்த ஒழுங்கீனங்கள் நடைபெற்றிருக்க இயலுமா? வேலியே பயிரைமேய்வது போல், பாதுகாப்புத் துறையே படுமோசமான செலவினங்களுக்கு ஆளாகியிருப்பது விந்தையாக இருக்கிறதல்லவா!

'எவர் எப்படியானல்-நமக்கென்ன' என்ற நினைப்பினல்தான் இவ்வாறான செயல்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. நாட்டை ஆளவந்த நாயகர்களோ இவைபற்றியெல்லாம் எள்ளளவும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அவர்கள் எங்கும் புகழ் தேடுவதிலேயே எப்போதும் குறியாக உள்ளனர். அந்தப் புகழுக்குப் பின்னே நாட்டுநடப்பில் இப்படிப்பட்ட புண் இருப்பது ஆபத்து என்பதை உணருவதாகத் தெரியவில்லை.

'நான் இருக்கப்பயம் ஏன்' என்று யாரோ சொல்லியனுப்பிய பிறகு, 'எதுவரினும் அஞ்சேன்' என்று இருக்கும் அசட்டுத் துணிச்சல்காரனைப்போல் இவர்கள் 'எனினும் எங்களுக்கென்ன' என்றே எப்போதும் இருக்கின்றனர். கலங்காத நெஞ்சம் என்று கருதுகின்றனர் அதை. ஆனல், அது உருகாத உள்ளம் என்பதே உண்மை. தவறு செய்தால் தண்டனை உண்டு என்பது வெறும் தத்துவமாகமட்டும் இருந்தால் பயன் இல்லை. தத்துவம் நடைமுறையிலும் பயன் உண்டு. ஆண்டிமுதல் ஆளுநர் வரையில் அத்தண்டனை இருத்தல்வேண்டும். ஆளவந்த நாம் ஆகாத நெறி சென்றால் மாளநேரும். இனிப் பொதுவாழ்வே நமக்கு வாய்க்காது என்ற அச்சம் இருக்குமாயின், எதிலும் எச்சரிக்கையோடு இருப்பர். ஆனல், இன்றே ஆயிரம் ஆயினும் நாமே ஆள்வோம் என்றநிலை இருக்கிறது என்ற எண்ணமே இவைபற்றி எண்ணவும் அவர்களைவிடவில்லை.

ஆனல், எத்தனை நாளைக்கு இந்த நிலையை நீடிக்கவிடுவது? விடிவே கிடையாதா?

உண்டு. அவர்கள் உணராத அந்த உண்மையினைப் பொதுமக்கள் உணர்த்தினல் போதும். திருந்தும்—செப்பம்—நேர்மை— வந்துவிடும். ஆட்சியும் மாட்சியுறும்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

கையில் பாட்டரி விளக்குடன் ஒருவர் உள்ளே இருந்து வெளிப்பட்டார். ஒளியை வெளியில் பாய்ச்சினர். அங்கே மழையில் நனைந்து கொண்டு, நடுக்கிக்கொண்டு நின்ற மருதனை அந்த ஒளி காட்டிக் கொடுத்தது.

"ஏய்! யாரடா அது?"

"நான்தான் முதலாளி, மருதன்"

"நீ என்ன பெரிய கவர்னரா' பேரைச் சொன்னவுடன் தெரிந்து கொள்வதற்கு! எந்த ஊர் நீ?"

"என்ன முதலாளி, என்னைத் தெரியாதுங்களா? ஊர் சீத்தாப்பட்டிங்க! மலையிலேயிருந்து வெறகு கொண்டு வருவேனே, தெரியாதுங்க!

"விறகு கொண்டு வரும் பயல்களை எல்லாம் யார், யார் என்று தெரிந்துகொள்வதுதான் என் வேலையா?—அது சரி, இப்போ, இந்த நடுக்கூற்று வேளையிலே இங்கே எதுக்கு வந்தே?"

"மழையிலே போக முடியலீங்க' மழை விடற மட்டும் இங்கே நின்னுட்டுப் போகலாமின்னு வந்தேனுங்க."

"ஓகோ, இது சத்திரமென்று நினைப்பா — உன் விருப்பம்போலே வந்து நின்றுவிட்டுப்போக! போ, போ! நடையைக்கட்டு! நீ ஒண்ணும் வெல்லக்கட்டி இல்லே; மழையிலே நனைந்தால் கரைந்துபோகமாட்டே! போ, போ! நடையைக் கட்டு"

"குளிர் நடுக்குதுங்க முதலாளி"

"அடே! குளிர் என்ருல், அதற்கு யார் என்ன செய்வது? போ, போ! வழியைப்பாரு. குளிர் நடுக்கிச் செத்துவிறைத்துப் போய்விடுவியோ!"

"வழி தெரியலீங்க, முதலாளி"

"என்னடா மாய்மாலம் பேசறே என்கிட்டே! காடுமேடெல்லாம் அலைகிறவன் — வழி தெரியாதாமில்லே, வழி!"

"ஒரே இருட்டா இருக்குதுங்க முதலாளி"

"டேய், வீணு, பேச்சை வளர்த்துக்கொண்டு நிற்காதே! சாரல் அடிக்குது, குளிரா வேறே இருக்குது. என்னல் இங்கே நின்று உன்னேடு வம்பு பேசிக்கொண்டிருக்க முடியாது. நான் தூங்கப்போகணும். போ, போ. போய்விடு! உம்! நடையைக்கட்டு. இல்லே நாயை உன் மேலே ஏவிவிடுவேன்."

வீட்டுக்காரர் மிரட்டி அதட்டினர். மேலே அங்கே நின்ருல் நாய்க் கடிக்குவேறு ஆளாகவேண்டும். மருதன் நடந்தான் மெல்ல.

"வழியில் போகும் திருட்டுப்பயல்கள்—மழையாம், குளிராம், இருட்டாம்"

தமக்குள் முனகிக்கொண்டு, வீட்டுக்குள் நுழைந்து, கதவை மூடித் தாள்போட்டுக்கொண்டார் அந்த வீட்டுக்காரப் பெரிய மனிதர்.

சற்று நடந்த மருதன் திரும்பிப் பார்த்தான். மேலே அவனல் நடக்க முடியவில்லை. மழையில் நனைந்து, நனைந்து கால்கள் மரத்துப்போய் விட்டன. எப்படியாவது அங்கே தங்கிவிட்டுத்தான் போகவேண்டும் என்றநிலை. மறுபடியும் வீட்டை நோக்கி நடந்தான் அவன். 'என்ன ஆனலும் ஆகட்டும்' என்ருெரு துணிச்சல் அவ்வேளை அவனிடம் பிறந்தது.

நாய் திண்ணையில் படுத்துக்கிடந்தது. அது இப்போது குரைக்கவில்லை. தன்பாட்டில் அடங்கி, முடங்கிக்கிடந்தது. வீட்டுக்காரர் வெளியே வந்து அதட்டி, மிரட்டிய போது, தன் குணத்தை அவரிடம் கொடுத்துவிட்டு, அவருடைய மனிதத் தன்மையை அது பெற்றுக் கொண்டுவிட்டதோ, என்னவோ! அல்லது, இந்த மருதன் என்ற மனிதன் விலங்கினும் கீழான நிலையிலிருந்து துன்பப்படுவதை, எல்லா உயிர்கட்கும் இயல்பாகவே அமைந்துள்ள அருள் மனப்பான்மையால் அந்த விலங்கு உணர்ந்துகொண்டு விட்டதோ என்னவோ! அது ஓசை எழுப்பவில்லை.

உடம்பிலிருந்த கந்தல்களையும், தலையிலிருந்த கோணியையும் ஒவ்வொன்ருகப் பிழிந்துவிட்டுக்கொண்டான் மருதன். அந்தப் பெரிய திண்ணையின் ஒரு மூலையில் ஒண்டி ஒடுங்கிக்கொண்டு அமர்ந்தான். குளிர் விட்டுவைக்குமா? ஆட்டிப் படைத்தது அவனை. எங்கே வீட்டுக்காரர் திடீர் என்று வெளியே தோன்றிவிடுவாரோ, விளக்கொளியைத் தன்மீது பாய்ச்சி, மூலையிலிருந்து வெளியே இழுத்துச் சென்று அதட்டி, மருட்டி, எங்கே துரத்தியடித்துவிடுவாரோ என்ற அச்சம் அவனை உலுக்கிக்கொண்டிருந்தது.

சிறு பொழுதில் எல்லாவற்றையும் மறந்து போனன். அவன் கூனிக் குறுகி அமர்ந்தவண்ணமே சுவரில் சாய்ந்தபடி உறங்கத் தொடங்கிவிட்டான். அப்படி உறங்கி, உறங்கிப் பழக்கப்பட்டவன்தானே அவன். அங்கு தரை கரடு முரடாக இல்லை; சாரல் வந்து தாக்கவில்லை. அவை போதாவா அவன் உறக்கம் கொண்டுவிட?

இன்னும் மழை விடவில்லை; பெய்துகொண்டிருந்தது. காற்று ஓயவில்லை; சுழன்று சுழன்று வீசிக்கொண்டிருந்தது. மின்னல் மின்னிற்று. இடி முழங்கிற்று. திடீரென்று அந்த வீட்டுக்குள்ளிருந்து ஒலி கிளம்பியது, பேரொலி, அவல ஒலி.

"பாம்பு, பாம்பு!"

பெண்கள் கூவினர்.

"என்னைக் கடித்துவிட்டதே!"

குழந்தையொன்று அலறியது.

"ஐயோ, என்ன செய்வேன்!"

வீட்டுக்கு முதியவர் அடித்துக் கொண்டார். எல்லாம் ஒருமித்த பேரோலம்!

"என் குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமே! மருத்துவரை அழைத்து வரவேண்டுமே! ஆள் இல்லையே அதற்கு! என்ன செய்வேன்! இந்த மழையிலும், காற்றிலும், இடியிலும், பேரிருளிலும் என்னல் தனித்துப் போகமுடியாதே! ஐயோ, என்ன செய்வேன்! என் குழந்தை சாகப்போகிறதே!" கதறிப் புலம்பினர் குழந்தையைப் பெற்றவர்.

அந்தப் பெருங்கூச்சல் மருதனின் செவியில் விழாமல் இருக்குமா? அவன் துள்ளி எழுந்தான்.

"முதலாளி!"

மருதன் ஓங்கி விளித்தான். கதவைத் தட்டினன்.

திகைத்தார் அந்த வீட்டுக்காரர். பேயோ, பூதமோ! அல்லது வெறும் ஒளி வெளிக்குரலோ......

அவர் மெல்லக் கதவைத் திறந்து கொண்டு எட்டிப் பார்த்தார்.

"முதலாளி!"

அவன் திரும்பவும் விளித்தான்.

"நீயா? இங்கிருந்து போய்விடவில்லையா நீ?"

(15-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

9—4—'61.

தம்பி!

மூவரும், கிராமம் சென்று பேசிக்கொண்டிருந்தோம் என்று சொன்னேன் அல்லவா. தாமரை பூத்தகுளம், என்று கவிகள் காட்டுகிறார்களே, ஏட்டில். அந்தக் குளம்—தாமரையும் இல்லை, தண்ணீரே போதுமான அளவு இல்லை; தவளைகள் தங்கி இருக்கும் அளவுக்குச் சேறு, குழம்பிக்கிடந்த நிலை. அங்கு, பெரிய வேப்பமரம்; அதன் அடியில், 'கன்னியம்மாள்' கோயில். அங்கு, கருங்கற்கள்—உட்கார்ந்து கொள்ளும் அளவில்! மூவரும் உட்கார்ந்தோம்; வேறு பல விஷயங்களைப் பேசிக் கொண்டு.

இரண்டு பேர், பேசும் குரல் கேட்டது; உற்றுக் கேட்டோம்.

"நீ எப்பவும் அதிர்ஷ்டக்காரன் தாண்டா! இந்தப் பொழைப்பும் ஒரு பொழைப்பா என்று, இதற்கு ஒரு தலைமுழுக்குப் போட்டுவிட்டுப் பட்டணம் போய், நிம்மதியாக இருக்கமுடிகிறது. என்னைச்சொல்லு; எல்லைக் கல்லாக இங்கேயே கிடக்கிறேன்."

"உனக்கு, ஆடுமாடு, காடுமேடு இவைகளை விட்டுவிட்டு வர மனம் இல்லை...... கா காணி வேறே இருக்கே, அதைக் கட்டிக்கொண்டு கிடக்கிறே..."

"அண்ணேன்! நானும் இன்னும் கொஞ்ச நாளிலே இந்தப் பட்டிக்காட்டுக்கு ஒரு தலைமுழுக்குப் போட்டுவிட்டுப், பட்டணம் வந்துவிடறேன்... அண்ணேன்! இப்ப நீ, எங்கே வேலைக்கு இருக்கறே?"

"ஆர்பர்லே... அதாவது துறைமுகத்திலே... கடலோரம்..."

"கடல் காத்துப் பட்டாலே போதுமாமே... உடம்பு பளபளன்னு ஆகிவிடுமாம்... உன் உடம்புகூட அண்ணேன்! மேனி போட்டிருக்குது..."

"போப்பா, கேலி செய்யறே... நான், கருப்பன், கருப்பன்தான்... ஆனா, பட்டணத்திலே என்னை எல்லோரும், இங்கே கூப்பிடுகிறதுபோல, கருப்பன், கருப்பன்னு கூப்பிடமாட்டாங்க. கருப்பையான்னுதான் கூப்பிடுவாங்க......... அதெல்லாம், ஒரு மரியாதைக்கு."

# நொட்டை காவேரி (2)

"இங்கே, இவ்வளவு வயசு ஆச்சி எனக்கு, இன்னமும் கண்டவங்க, மொட்டை, மொட்டைன்னுதானே கூப்பிடுகிருங்க, துளி கூட மரியாதை இல்லாமே. ஆமாண்ணேன்! நீ, இருக்கிற தெரு, பெரிசா?"

"அடேயப்பா! எம்மாம் பெரிசு! நம்ம ஏரிக்கரையிலே இருந்து, பக்கத்து ஊர் எல்லம்மா கோயில் வரைக்கும், ஒரே தெருவா இருந்தா, எப்படி இருக்கும்! அம்மாம் பெரிசு!"

"கரன்ட் விளக்குத்தானே?"

"ஆமாம்! கண்ணைப் பறிக்கும்."

"இங்கே, சூரியன் மலைவாயிலே விழ வேண்டியதுதான் பாக்கி, ஒரே இருட்டு! பாம்பு கடிச்சாக்கூட, ஒரு பச்சிலை தேடிப் பறிக்க வெளிச்சம் கிடையாதே. ஊராவா இருக்குது; அண்ணேன்! தெருவுக்கு என்ன பேரு..."

"பவழக்காரத் தெரு..."

"அஞ்சு, ஆறு கிடைக்கும் கூலி என்கிறயே, அம்மாம் பணமுமா, செலவழிச்சி விடுவே......"

"அடபோடா, பைத்யக்காரா! சுகப்படத்தானே அங்கே போனது. ஒரு சொக்கா துணி இல்லாம, இங்கே இருக்கற மாதிரியா, பிறந்த மேனியாவா இருக்கறது? இங்கே பச்சை மிளகா ஒண்ணைக் கடிச்சிகிட்டுப், பானைக் கஞ்சியைக் குடிக்கறது வழக்கம். அங்கே அப்படி முடியுமா! அப்படி இருக்கலாமா! நாலு பேர் பார்த்தா என்ன சொல்லுவாங்க."

"காப்பித் தண்ணி குடிப்பே..."

"ஒரு நாளைக்கு நாலு தடவையாவது..."

"இங்கே, காச்சல் வந்தா, காப்பி ஒரு முழுங்கு குடிடான்னு, வைத்தியர் சொல்ருரு..."

"அங்கே காச்சல் வந்தா, உடனே ஊசி போட்டுக்கணும்..."

"ஆசுபத்திரியிலே..."

"ஆமாம்...ஆனு, வேலை மேலே இருக்கறதாலே, அங்கே போயி காத்துகிட்டு இருக்க முடியறதில்லை. நம்ம வீட்டுப் பக்கமா, டாக்டரய்யா இருக்கருரு, அவர் போட்டுவிடுவாரு, ஊசி."

"பணம் கொடுக்கணுமேல்லோ..."

"பின்னே! அவர் வயிறு என்ன மண்ணையா தின்னும்."

"அண்ணேன், கடல் காத்து வாங்கப் போறதாமே, நீயும் போவயா... எப்பவாவது"

"நானு! ஒவ்வொரு நாளும் கடல்காத்து வாங்கப் போவேனே......"

"நீ, கொடுத்து வைத்தவன், அண்ணேன். நான் வயித்தெரிச்சல் படறதா எண்ணிக்கொள்ளாதே, நான் சுகப்படாவிட்டாலும், நீ சந்தோஷமா இருக்கறயே, அது போதும். ஏண்ணே! இப்பத்தான் நீ, நிம்மதியா, வேலை கிடைச்சு, பட்டணத்திலே வாசம் செய்யறியே, அந்தப் பழைய கடனைக், கொஞ்சம் கொஞ்சமா கொடுத்துவிடக் கூடாதா! நான், கொழந்தை குட்டிகாரனுச்சே......"

"அட, கொடுக்கறம்பா! இப்ப, கொஞ்சம் செலவு. அங்கேகூடக் கொஞ்சம் கடன் இருக்குது......"

"அங்கே, உன்னை யாருக்குத் தெரியும். யாரு கடன் கொடுத்தாங்க......"

"இங்கே போலவா, அங்கே. மூனு தலைமுறையா, நாணயமான குடும்பமா, நிலம் இருக்குதா நீர் இருக்குதான்னு பார்த்துக் கடன் கொடுக்க. அங்கே ஆளோட நம்பிக் கையின் பேரிலேயே, கடன் கொடுக்கருங்க போயேன்—ஐம்பது வேணுமா, நூறு வேணுமான்னு. மனஷாளோட மதிப்புத்தான் பெரிசு அங்கே. கடனைத் திருப்பிக் கொடுக்கச் சுலபமான வழியும் இருக்குதா, இங்கே. அறுவடை காலத்திலே வந்து, களத்துமேட்டிலே உட்கார்ந்துகிட்டுப், பூரா கடனுக்கும், அளடா நெல்லே என்கிருனே, அதுபோலவா? ஒவ்வொரு நாளும், கையிலே கிடைச்சதைக் கொடுத்துகிட்டு வரலாமே — காலோ அரையோ, ஒண்ணோ ரெண்டோ, நம்ம இஷ்டம் போலே......"

"இம்மாம் சௌகரியம் இருக்குது, அண்ணேன்! எல்லாம், சொயராஜ்யம் வந்த பிறகுதானே, இதெல்லாம்......"

"ஆமாம்......நான்கூட ஒருநாள், நம்ம கைராட்டை காவேரியைப் பார்த்தேன். ரொம்ப நேரம் பேசிக்கொண்டு இருந்தோம், கடற்கரையிலே."

"அப்படியா! அவரும் காத்து வாங்க வந்தார்போல இருக்கு. வீட்டுக்குக் கூட்டிகிட்டுப் போனயா?"

"இல்லே! அவருக்கு வேலை ஓய்வில்லேன்னு தெரிஞ்சுது. நாம போயி, அவரோட வேலையைக் கெடுக்கலாமா...பட்டணத்திலே, அப்படி அனுவசியமா, ஒருத்தர் காரியத்திலே ஒருத்தர் தலையிடமாட்டாங்க......"

"ஆமு, உபகாரம் செய்ய ஆள் இருக்குதே. கேட்டா, கடன் கிடைக்குது என்கிறயே...அது சரி. கோயில் கொளம், இருக்குதா......"

"அட, ஏன் இல்லே! நம்ம வீட்டுக்குப் பக்கத்திலேயே வேலாத்தம்மன் கோயில் இருக்குதே. இப்பத்தான் போன மாசம் அபிஷேகம் நடந்தது. பழத்தாலே......"

"பழமா......"

"ஆமாம்...இங்கே ஏது அந்தப் பழமெல்லாம். ஆப்பிளு, திராட்சை, கமலா, உம்! தினுசு தினுசான பழம்."

"ஆத்தா கொடுக்கரு; கொடுக்கறவளுக்குக் கொண்டாட்டம் நடத்தாமே...... இங்கே, காலரா வந்தா, காப்புக் கட்டிக் கடா வெட்டறோம்......"

"அங்கே, உடனே, மோட்டார் வரும்......"

"மோட்டார்காரு எதுக்கு......"

"காலராக்காரனை, தனி ஆசுபத்திரிக்கு அழைச்சுகிட்டுப் போவாங்க......"

"அப்படி இல்லவா இருக்கணும், ராஜாங்கம்னு."

*

காவேரிக்குக், குழப்பம், கலக்கம், கவலை, எல்லாம் பறந்தே போய்விட்டது. இதோ ஒரு ஏழை; உழைத்து உருக்குலைந்துபோனவன்; பட்டணம்சென்று, நல்லபடி வாழமுடிகிறது; நம்ம ராஜாங்கத்தில்—என்று எண்ணி, என்னைப் பெருமிதத்துடன் பார்த்தான்.

பேச்சுக்குரல் அடங்கிவிட்டது. இருவரும், எழுந்து போய்விட்டனர்; நாங்கள் மூவரும் எழுந்தோம், வீடு செல்ல. சுற்றிய அலுப்பு; வீட்டில் கிரசின்விளக்குத்தான்; எனவே படிக்கவோ, எழுதவோ முடியவில்லை; சீக்கிரமாகவே படுத்துத் தூங்கிவிட்டோம். மறுநாள் பகலில் வெளியில் கிளம்பமுடியவில்லை.

பச்சைப்பட்டு விரித்தாற்போலப் பாங்கான காட்சி, நீலநிற நீர்நிரம்பிய குளம், அதிலே, பலவண்ணப் பூக்கள்; கரையோரத்தில் வெண்ணிறக் கொக்குகள்; செடிகொடிகளிலே மலர் கூத்தாடும்; பழமரங்களில் கிளிகள், நாகணவாய்ப்புட்கள், உற்றுக்கேட்டால், குயிலின் குரல், வானம்பாடியின் இசை—இவைகளைச் சுவைக்கத் தெரியாததால், வெளியேபோகவில்லை என்று எண்ணிவிடாதே, தம்பி! ஏடுகளில் படிக்கும் போதே, இனிக்கிறதே — நேரில் காணக் கசக்குமா! ஆனுல் இருந்தால்தானே காண!!

எலும்புந்தோலுமான மாடுகளை, இவனும் நமது இனம்தானு என்று சந்தேகப்பட்டுக் கேட்கவேண்டிய நிலையில் இருப்பவன் ஓட்டிக்கொண்டு போகிருன். ஒவ்வொருநாளும்தான் போகிறேம், கண்டது என்ன, கால் கடுக்கச் சுற்றியது தவிர, என்ற எண்ணமோ என்னமோ, மாடுகள் துளிகூட ஆவலோ சுறுசுறுப்போ அற்ற நிலையில், சென்றன! அவனும், அவைகளை விரட்டவில்லை. பூச்சூடி விளையாடவேண்டிய வயதுச் சிறுமிகள், தலையில் புல்லுக்கட்டுகளைச் சுமந்துசெல்கிருர்கள்—கிராமத்துக்கு வெளியே. கோழிமுட்டைகளை எடுத்துக், கந்தல் துணியில் முடிந்து, சிலர், செல்கிருர்கள்—கோழியும் பார்க்கிறது—வீட்டுச் சிறுவனும் பார்க்கிருன் — நமக்குப் பயன்படவில்லை, எந்த மாடிவீட்டுக்குப் போய்ச் சேருகிறதோ முட்டைகள், என்ற ஏக்கத்துடன். கடப்பாரை காலில் விழுந்ததால் ஏற்பட்ட வெட்டுக் காயத்துக்குப், பச்சிலை அரைத்துப் பூசிக்கொண்டு, வேலைக்குச் செல்கிருன் ஒரு பாட்டாளி. தன் ஆறு குட்டிகளும், பின்தொடரச், சொறிபிடிக்கும் நிலையில் உள்ள நாய், குப்பைமேடு நோக்கி ஓடுகிறது. ஏற்றம் இறைக்கிருர்கள்! ஏர் உழுகிருர்கள்!! எங்கும் உழைப்புத் தெரிகிறது, உற்சாகத்தைக்காணேம். சிரிப்பு எழவில்லை, சலிப்புக்குரலொலிதான் கேட்கிறது. சுற்றிலும் பொட்டல், எனவே, வெப்பக்காற்று வீசுகிறது. இப்படிப்பட்ட இடத்திலே, காலையிலே, கடும் வெயிலிலே, சென்று, என்ன காண்பது—என்ன இனிமை பெறமுடியும்? கட்டு அறுத்துக்கொண்டு ஒரு முரட்டுக்காளை ஓட, அதனைத் துரத்திப்பிடித்து மடக்க, அடக்க, ஒரு வீர இளைஞன் செல்கிருன்—என்ற விதமான காட்சி யாவது இருந்தால், பார்க்கலாம். எதுவும் இல்லை. விசை கொடுக்கப்பட்ட உருவங்கள்தான் தெரிந்தன. சரி! கிராமங்களின் கவர்ச்சிபற்றிப், பட்டணம்சென்று, கவிதைகளைப் படித்துச் சுவைத்துக்கொள்ள வேண்டியதுதான் என்று எண்ணிக்கொண்டோம். மாலைவரையில், வீடே கதி.

*

இருட்டும் நேரம்; இங்கும் அங்குமாகச் சில குடிசைகள் இருக்கும் வழியாக நடந்துவந்துகொண்டிருந்தோம். வழி, என்று சொன்னேன்—அதற்குத் தெற்குப் பெரிய தெரு என்று பெயராம்!!

சற்றுத் தொலேவிலிருந்த ஒரு குடிசைப்பக்கம், நாலேந்துபேர் ஓடினுர்கள்—குய்யோ முறையோ என்ற கூக்குரல் கேட்டு; நாங்களும், ஓடினேம்.

நாங்கள், அந்தக் குடிசைக்கு அருகிலே சென்ற நேரத்தில், ஏற்கனவே அங்கு சென்றவர்கள், திரும்பி விட்டனர்.

"வீட்டுக்கு வீடு வாசற்படிதான், வாங்க"

"என்னதான் சொல்லு—இப்படிக், கண் மண் தெரியாமல் அடிக்கக்கூடாது."

"பட்டணத்துக்குப்போய், பய, இதைத் தான் தெரிஞ்சுகொண்டு வந்திருக்கிருன் போல இருக்குது."

"அந்தப் பொம்பளேயும், மனுஷன் சுபா வத்தைத் தெரிஞ்சி, அடங்கினு என்னவாம்!"

"அட, அவளுக்கும் ஆசைடோய், பட் டணம் பார்க்க......"

இப்படிப் பேசிக்கொண்டு, அவரவர்கள் தத்தமது வேலே களேக் கவனிக்கச் சென்றனர். நாங்கள் மூவரும், குடிசை எதிரில் நின்ருேம்.

உள்ளே இருந்து ஓலம்! அந்த அழுகுரலே அடக் கும் அளவுக்கு, ஆடவனின் அதிகாரக் குரல். குழந் தைகளின் கூக்குரல்! இடையிடையே, அடி, அறை, குத்து, இவைகளின் சத்தம். உள்ளே, போர்க்களம்; சந்தேகமில்லே. சரேலென உள்ளே நுழைந்தோம். எதிர்பாராத எங்கள் நுழைவு, அமளிக்கு முற்றுப் புள்ளி வைத்தது; ஆனல், அழுகை ஓயவில்லே; அவ னுக்கு மேல் மூச்சு நிற்கவில்லே. காவேரியைப் பார்த்து, நீங்களா? என்று, சிறிதளவு கூச்சம் கலந்த பயத்துடன் கேட்டான்.

காவேரி, சற்றுக் கடுமையாகவே, "உன்னே நான் யோக்யன் என்று எண்ணிக் கொண்டிருந்தேன், இது நாள் வரையில். ஒரு பெண் பிள்ளேயைப் போட்டு மாட்டை அடிப்பதுபோல அடிக்கிருயே, ஈவு இரக்கம், தர்மம் நியாயம், நாகரிகம் எதுவுமின்றி. செ! இவ்வளவுதானு, பெண்களே அடிப்பது ஒரு பெரிய வீரமா!" என்ருன்.

"பெண்ணு! இவ! பேய், காவேரி அண் ணேன், இது என் உயிரை வாங்கும் பேய். உனக்குத் தெரியாது."

"பேய்தான் நானு......ஆமா...நியாயத் தைக் கேட்கறனே, அதனலே......"

"என்ன நியாயத்தைடி நீ கண்டு விட்டே."

"ஊர் உலகம் ஒத்துக்கொள்கிற நியா யத்தைத்தான், நான் கேட்கிறேன், ஐயா! நீங்களே சொல்லுங்க. இங்கே, நான் இந்த மூணு சனியன்களேக் காப்பாத்தப் படாத பாடுபட்டுக்கொண்டு கிடக்கறேன். காட் டிலே ஒவ்வொரு நாளுமா, சுள்ளியும் விறகுக் குச்சியும் கிடைக்கும்? நாலுநாளேக்கு ஒரு கட்டுக் கிடைச்சாலே பெரிய அதிர்ஷ்டம். அதைவித்து, இதுகளேக் காப்பாத்திகிட்டு, நான் கால்வயிறு கஞ்சிக்கு இங்கே அலே யறேன். இந்த மனுஷன் பட்டணத்திலே, குஷாலா காலந்தள்ளிகிட்டுக் கிடக்கருரு. நானும் வர்ரேன், அழைச்சிகிட்டுப்போ என் கிறேன்—முடியாதாம்......"

"முடியாது... என்னுண்றே! தலேயைச் சீவிடுவயா..."

"நான் ஏன் சீவணும். ஆண்டவன் பார்த்துகிட்டுத்தானே இருக்கருரு, நீ செய் யற அக்ரமத்தை; உன் தலேயிலே ஒரு நாளேக்கு இடிவிழாமலா போகும்!"

"விழட்டும்... செத்துத் தொலேக்கறேன். அப்புறம், உடம்பு பூரா பூசிக்கடி மஞ்சக் குங்குமம்... கேட்டிங்களேல்லோ பேச்சை... இடிவிழணுமாம், என் தலேயிலே..."

காவேரி, மேற்கொண்டும் அவன், அவளே அடிக்க ஒட்டாதபடி தடுத்துவிட்டு,

"ஏன்யா! இதிலே என்ன தப்புஇருக்குது. உன்னேடு அழைச்சிக்கொண்டு போகவேண் டியதுதானே."

என்று கேட்டான். அவன், எவ்வளவோ வேதனேயை அடக்கிக்கொள்பவன்போலாகி,

"பட்டணம்தானே! அழைச்சிக்கொண்டு போகவேண்டியதுதான், இந்தப் பட்டத்து அரசியை! ஏன்னு, ஆறு அடுக்கு மாடி இருக்குதேல்லோ, எனக்கு, அங்கே; இவ வந்து உலாத்தணும், அந்த அழகை நான் பார்க்கணுமேல்லோ. காவேரி அண்ணேன்! உனக்கு ஒரு இழவும் புரியறது இல்லே. சுத்தச்சொன்னு, நாளெல்லாம் கைராட்டி னத்தைச் சுத்திகிட்டுக்கிடப்பே. குடும்ப விவகாரம், உனக்கென்ன தெரியும்? நான் அவளே அடக்கறவிதமாக அடக்கிக்கொள் கிறேன். நீ, போ, இதிலே தலேயிடாம..."

என்று கோபம் குறையாத நிலேயில் பேசினுன்.

"ஏம்பா! இங்கே கிராமத்திலே இருந்து தான் நிம்மதியாக வாழமுடியவில்லே. பட்ட ணம் போயிருக்கறே—எதோ வேலே செய்து பிழைக்கறியே—கூட உன் சம்சாரம், கொழந் தைகள் இருக்கவேண்டியதுதானே தர்மம், நியாயம், முறை. இதுகள் இங்கே பட்டினி கிடக்கறபோது, நீ மட்டும், பட்டணத்திலே இருக்க, எப்படி மனம் இடம் கொடுக்கும், உனக்கு."

என்று நான் கேட்டேன். கனிவாகப் பேசினல், அவ னுடைய காட்டுக் குணம் மாறக்கூடும் என்ற எண் ணத்தில்.

"ஐயா! நான்தான் அங்கே, நாய் படாத பாடுபட்டுக்கொண்டு கிடக்கறனே, இவளை யுமா, அந்த வேதனையிலே கொண்டுபோய்த் தள்ளணும்," என்றான்—கோபம் குறைந்து, துக்கம் வளர்ந்து வரும் நிலையில்.

"ஏம்பா! ஒரே அடியா பொய் பேசறே. உனக்குத்தான், ஆர்பர்லே வேலேன்னு சொன்னயே நேத்து, உன் சினேகிதனிடம்."

"அட, யாரய்யா, விவரம் கெட்ட ஆளா இருக்கறே. கடன்பட்டும் காலங் தள்ளமுடி யாததாலே, சொல்லாம, கொள்ளாம, ஓடிவிட் டேன் சென்னை பட்டணம். திரும்பி வந் தேன், மனசு கேக்காததாலே, இந்தச் சனி யன்க கண்ணிலேயே இருக்கற மாதிரியா இருந்தது. வந்த இடத்திலே, சென்னைப் பட் டணத்திலே எப்படி இருக்கறே, என்ன வேலே செய்கிறேன்னு எவனுவது கேட்டா, என்ன சொல்ல முடியும்? அங்கேயும் அவதிதான்னு சொல்ல முடியும்? அதனுலேதான் ஆர்பர்லே வேலேன்னு சொன்னேன். ஆர்பர்லே வேலேன்னு சொன்னதும், நீ, என்ன, இவ ளாட்டம், நான் ஒரு ஆபீசர்னு நினைக்கறியா? மூட்டை ஏத்தறது இறக்கறதுய்யா, வண்டி களிலே! தெரியாதா, அதுதான், உத் யோகம், ஆர்பரிலே.!"

"அஞ்சு ஆறு சம்பாதிப்பதாகச் சொன் னயே."

"ஆமாம், சொன்னேன். பய, பட்டணம் போயிருக்கான், அங்கே திண்டாட்டம்தான் இவனுக்கு. பிச்சை எடுக்கப்போருன் பாரேன், நாமே காதாலே கேட்கப் போரோம், கண் ணுலே பார்க்கப் போரோம். பய பெரிய படிப் பாளி—இல்லேயானு 'மெஷின்' ஓட்டுகிற திலே கை தேர்ந்தவர்—அப்படி ஒரு நினைப் புப்போல இருக்குது, என்று பேசிக் கேலி செய்கிருர்களே, அவர்கள் வாயை அடக்க, ஆர்பர்லே வேலேன்னு சொன்னேன்; மூட்டை சுமக்கறதை மறைச்சி."

"ஒவ்வொரு நாளும் கடல் காத்து வாங்கு வேன், உடம்புகூட அதனுலே பளபளன்னு ஆகுது என்று சொன்னயே—நாங்க கேட்டுக் கொண்டு இருந்தமே."

"மூட்டை சுமக்கற நேரம் போக, மிச்ச நேரத்திலே கடற்கரையிலே, பட்டாணி கடலே விற்கறதய்யா. அதை எப்படி, அப்பட்ட மாச்சொல்றது. அற்பப் பசங்க கேலி செய் வானுங்கன்னு அப்படி, மறைச்சிப் பேசி னேன். மனஷனுக்கு மானம்னு ஒண்ணு இருக்க வேணுமா! நம்ம காவேரி பார்த் தாரே என்னை, கடக்கரையிலே பட்டாணிக் கூடையோட."

"பட்டாணி கடலே விற்கறவன், பகலிலே மூட்டை சுமக்கறவன், பவழக்காரத் தெரு விலே எப்படிக் குடி இருக்கமுடியும்? அது பெரிய பணக்காரர்கள், வியாபாரிகள், இருக் கற தெருவாச்சே."

"ஆமாம்... அங்கே ஆரும் நம்பர் மாடி வீடு, நூறு ரூபா வாடகை கொடுக்கறேன். ஏன்யா வயத்தெரிச்சலேக் கொட்டிக் கொள்றே. பவழக்காரத் தெருதான்யா— வீடு எவன்யா நமக்குக் கொடுப்பான்—தெரு ஓரம்,—நடைபாதை–சரிதானு! இதைப்போயி சொல்லச் சொல்றயா, அவன் கிட்ட...... சொன்னு என்னைக் காகாசுக்கு மதிப்பானு. நானே அவன்கிட்ட கடன்பட்டிருக்கறேன்..."

"பட்டணத்திலே, கடன் கொடுக்கப் பல பேர் இருக்கருங்க–மனஷாளோட நம்பிக்கை யின் பேரிலேயே கடன் கொடுக்கருங்க—ஒவ் வொரு நாளும் கால் அரை கட்டலாம். இப்படிச் சொன்னயே."

"அது புரியல்லேயா, உனக்கு. ஈட்டிக் காரன் தெரியுமா, உனக்கு; அட, காபூல் காரன்யா! அவனுங்க கடனை எங்க தலேயிலே கட்டிவிட்டு, ஒவ்வொரு நாளும், வந்துவிடு வான், கையிலே சவுக்கு எடுத்துக்கொண்டு. தெரியுமா! காலோ அரையோ கொடுக்கல்லே, சவுக்காலேயே கொடுப்பான்."

"அட பைத்யக்காரா! அதைத்தானு, அவ்வளவு கௌரமாச் சொன்னே."

"அப்படிச் சொல்லாமே, தெரு ஓரத் திலே கிடக்கறேன் — மூட்டை தூக்கிப் பிழைக்கறேன் — என்று சொன்னு, ஊரார் பார்த்து மதிச்சி, மெடல் கொடுப்பாங்களா! சுத்த பைத்யக்காரனு, இருக்கறியே... சும்மா சொல்லிவைக்கறதுதான், மானம் போகாம லிருக்க. இவளிடம் சொன்னேன். நம்பி ளுளா!! ஆர்பர்லே வேலேயாமேன்னு, பெரிய உத்யோகத்திலே நான் இருக்கறமாதிரியாக வும், அடுத்த கவர்னர் நான்தரன் என்கிற மாதிரியாகவும் எண்ணிக்கொண்டு, நானும் வர்ரேன் என்கிரு, பட்டணத்துக்கு. இவளே யும் இழுத்துக்கிட்டுப்போய், நடைபாதை யிலே குடும்பம் நடத்தவா — இந்த மூணு கோட்டான்களேயும் கூட்டிகிட்டுப் போகவா!! ஆர்பர்லே போயி, வெளியே வருவதற்குள்ளே ஆபீசர்கள் திட்டு, போலீஸ் அடி, இந்தப் பொழைப்புக்குப் போட்டி போட்டுக்கொண்டு வருகிறவங்களோட தொல்லே — கொஞ்சமா நஞ்சமா, நான் பட்டுக்கொண்டு வர்றது. இவ வேறே வரணுமா-நான் மூட்டை சுமக்கறதை யும், உதைபடறதையும் பார்க்க."

"ஏம்பா, நீ, பட்டணம் போயி, இந்தப் பாடுபடணும்......?"

"என்னைக் கேக்கறியே, இதோ காவேரி அண்ணனைக் கேளு. இவங்களோட ராஜாங் கத்திலே, ஏழைங்களுக்கு இதுதான், கதி."

*

மனதிலே குமுறிக்கொண்டிருந்ததையெல்லாம் கொட்டிவிட்டதாலே, கூடைக்காரனுக்குக்கொஞ்சம் நிம்மதி. கணவன்படும் கஷ்டத்தை அறிந்ததாலே, மனம் இளகிற்று, மனைவிக்கு. உண்மை தெரியாமல் அவனிடம் வம்புக்கு நின்றோமே என்று வருத்தப்பட்டுக்கொண்டாள். ஆனால், இவர்களுடைய வருத்தத்தைவிட அதிக அளவு வருத்தம் காவேரிக்குத்தான். மலைபோல நம்பிக்கொண்டிருக்கும் காங்கிரசாட்சியிலே, உழைப்பாளிக்கு இதுதான்நிலை, என்று அறிந்து குமுறினான்.

•

மூவரும், நகரம்வந்து சேர்ந்தோம். காவேரி, என்னை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டான். எனக்கு என் கட்சியின்மீதுள்ள பற்றுதலால், உன் பேச்சைக் கேட்கக்கூட எரிச்சலாக இருக்கும். இப்போது ஓரளவுக்கு எனக்கும் உண்மை புரிகிறது, மேலும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலும் பிறக்கிறது, என்றான். “காவேரி! இப்போதுதான், வெள்ளைக்காரனை எதிர்த்தபோது, உன்னிடம் இருந்த தெளிவு, துணிவு, வீரம் மறுபடியும் மலருகிறது. வெள்ளைக்காரன் வெளியேறிக், காங்கிரஸ் ஆட்சி அமைந்ததும், உனக்கு மகிழ்ச்சி, பெருமை, பக்தியே ஏற்பட்டுவிட்டது. வழிபடும் தெய்வமாக்கிக்கொண்டாய் காங்கிரஸ் ஆட்சியை; அந்த ஆட்சியோ, உன்போன்ற உண்மைத் தொண்டர்களைப் பலிகேட்கிறது; இரத்தம் குடித்துக் கொழுக்கிறது. காங்கிரஸ்சாட்சியிலே, காவேரி! **270-இலட்சம் மக்கள் ஒரு நாளைக்கெல்லாம் ஒரு மணிநேரம் மட்டுமே செய்வதற்கு வேலைபெற்று, மற்ற நேரத்தில், தேம்பித் தவிக்கிறார்கள். 200-இலட்சம் மக்கள் இரண்டுமணிநேரமும், 450-இலட்சம் மக்கள் 4-மணிநேரமும்தான் வேலை கிடைக்கப்பெற்று, அதிலே கிடைக்கக்கூடியது கால்வயிற்றுக்கும் போதாததால் வேதனைப்படுகிறார்கள். 600-இலட்சம் மக்களுக்கு ஒரு நாளைக்கு 5-அணா அளவில்தான் வருமானம்! 400-இலட்சம் மக்களுக்கு 4-அணா அளவு! 200-இலட்சம் மக்களுக்கு 2-அணா!!**

இது, சர்க்காரின் அனுமதியுடன் நடத்தப்பட்ட **ஆராய்ச்சிக் குழுதருகிற** புள்ளிவிவரம்.

இதேபோது, வெள்ளைக்காரன் காலத்திலே கிடைத்ததைவிட, வருவாய் இப்போது, காங்கிரஸ் ஆட்சியின் போது, வணிகக் கோமான்களுக்குக் கிடைக்கிறது என்று, வணிகர்கள் மகாநாட்டிலேயே பேசப்படுகிறது.

முதலாளிகளுக்குச் சர்க்கார் காட்டியுள்ள சலுகை— **காங்கிரசாட்சி—590-கோடிரூபாய்** அளவாம்.

சுயராஜ்யம் கிடைக்குமுன்பு, தனிப்பட்ட முதலாளிகள் நடத்திய தொழில்களில், அவர்களின் மூலதனம் 700-கோடி ரூபாய். இப்போது, சுயராஜ்ய ஆட்சியின் பயனாக, 1900-கோடி ரூபாய், தொழில்களில்.

காவேரி! உன்னைப்போல உழைத்த உத்தமர்களல்ல, தியாகச் செம்மல்கள் அல்ல, காற்றடித்த பக்கம் திரும்பும் துருத்திகள், விளைந்த காட்டுக்குருவிகள், பழந்தின்னிப்பறவைகள், காங்கிரசாட்சியிலே தங்கள் ஆதிக்கத்துக்கு வழிவகுத்துக்கொண்டு, காங்கிரசைப் புகழ்ந்து பேசுவதுடன், ஆட்சியின் அலங்கோலத்தை எடுத்து விளக்கும் எங்கள்மீது சீறிப்பாய்கிறார்கள்; எம்மைத், தேசத்துரோகிகள், பிளவுமனப்பான்மையினர் என்றெல்லாம் ஏசிப்பேசி, உன்போன்ற உண்மைத் தொண்டர்களை ஏமாற்றப்பார்க்கிறார்கள்; நீங்களும் மயங்கிவிடுகிறீர்கள்.

“கனம் உதவி சபாநாயகர் அவர்களே! நாடு சுதந்திரம் அடைந்த ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி விவாதிக்கப் புகுந்திருக்கிறோம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி நிதி மந்திரி அவர்கள் சொல்லும் காலத்திலும், அறிக்கையின் வாயிலாக நாம் பார்க்கின்றபோதும், மக்களுடைய வாழ்க்கையின் தரம் மூன்று சதவிகிதம் உயர்ந்து இருக்கிறது என்று தெரிகிறது. அது சராசரியாகப் போட்ட கணக்காகத்தான் இருக்கும். உண்மையாகவே கிராம மக்களும், நடுத்தர வர்க்கத்தினரும், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக இருந்தநிலைமையை விட இப்பொழுது அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டதாகச் சொல்ல முடியாது.

“உற்பத்தி செய்யுங்கள் அல்லது அழிந்துவிடுங்கள்’ (Produce or perish) என்று சொல்லப்படுகிறது. ஆனால், உண்மைநிலை எப்படியிருக்கிறது? ‘உற்பத்தி செய்து, அழிந்து விடுங்கள்’ (Produce and perish) என்ற நிலைமைதான் இருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. தொழிலாள மக்களும், விவசாய மக்களும், நாட்டில் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதேமாதிரி உற்பத்தியையும் பெருக்குகிறார்கள். உற்பத்தியை என்னவோ அவர்கள் பெருக்கிக்கொண்டிருக்கிறார்களே தவிர, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதா என்றால், அதுதான் கிடையாது. மூன்று சதவிகிதம் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இன்னும் அதிகமாக உயர்த்தப்போவதாகச் சொல்லுகிறார்கள்.

“கனம் நிதி மந்திரி அவர்கள் கொள்கையை விளக்கும் காலத்தில், கனரகத் தொழில்களை முதல்படியாக அமைக்கப் போவதாகவும், அதற்குஅடுத்தப்படியாகக்குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்யப் போவதாகவும், அதன்மூலமாக மக்களுடைய வாங்கும் சக்தி உயரும் என்றும், விவசாயத்திலே மாறுபாடு செய்யப்போகிறோம் என்றும் சொன்னார்கள்.

“கனரகத் தொழிலைப்பற்றிச் சொல்லும் போது, உருக்குத் தொழிற்சாலையை டில்லி

நகரத்திலும், அலுமினியம் தொழிற்சாலையை இன்னொரு இடத்திலும் வைக்கப்போவதாக யோசிக்கப்படுகிறது. எஃகுத் தொழிற்சாலையைப் பீகாரில் நிறுவலாமா என்றுபேசப்படுவதாக நேற்றுப் பத்திரிகையில் பார்த்தேன். அது ஏன் என்று சொல்லவேண்டும்? தென்னாட்டில் பல அங்கத்தினர்கள், நாங்கள்மட்டுமல்ல, காங்கிரஸ் பக்கத்திலுள்ள அங்கத்தினர்கள்கூட நிச்சயமாகத் தென்னாட்டிலே சரியான ஆலைத் தொழில் இல்லையென்று சொல்லிவந்திருக்கிறார்கள். சேலத்தில் ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலையை நிறுவவேண்டுமென்று இந்த மாகாணத்தில் இருக்கக்கூடிய சகலமக்களும் தெரிவித்தும்கூடச், சேலத்தில் நிலக்கரி கிடையாது, அதனால் உருக்குத் தொழிற்சாலையை ஏற்படுத்த முடியாது என்று மத்திய சர்க்காரால் பேசப்படுகிறது. ஆனால், பத்திராவதியில் நடப்பது என்ன? டன் ஒன்றுக்கு நூறு ரூபாய் வீதம் மத்திய சர்க்கார் (subsidy) கொடுக்கிறார்கள். அதேமாதிரி சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையை அமைப்பதற்கு வேண்டிய உதவியையும் மத்திய அரசாங்கம் அளிப்பதற்கு முன் வரவேண்டும். அலுமினியம், பாக்சைட் ஆகிய தாதுப்பொருள்கள் சேலத்தில் கிடைக்கின்றன. நிச்சயமாக ஒரு அலுமினிய உற்பத்தித் தொழிற்சாலையை அங்கு அமைக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கட்டாயப்படுத்தவேண்டும். திருச்சி ஜில்லாவில் ஆயிரக்கணக்கான டன் எடை உள்ள ஜிப்சம் கிடைக்கிறது. அதைக்கொண்டு சூப்பர்பாஸ்பேட் செய்ய நல்லதொரு தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டும். இம்மாதிரி கனரகத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தும்போது, அவை தனிப்பட்டோருடைய மேற்பார்வையில் விடப்படவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படிச் செய்வதற்குப் பதிலாக மத்திய சர்க்காரோ, சென்னை சர்க்காரோ நேரடியாக நடத்துவதற்கு முன்வர வேண்டும். தனிப்பட்டவர்களுக்குக் கொள்ளை இலாபம் கிடைக்கும்படியாக விட்டுவிடக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

“சென்ற ஐந்தாண்டுத் திட்டத்தில் உற்பத்தி பெருகிவிட்டது என்று சொல்லப்பட்டது. பஞ்சாலைத் தொழிலிலும், சிமெண்ட் தொழிலிலும் உற்பத்தி பெருகியிருக்கிறது. அதன் மூலம் தனிப்பட்டவர்களுக்கு இலட்சக்கணக்கான ரூபாய் இலாபம் சென்று கொண்டிருக்கிறது. அந்த இலாபத்தை நிறுத்திக் கட்டுப்படுத்தவேண்டும். மக்களின்மீது மேலும் மேலும் வரியைச் சுமத்திக் கொண்டிருப்பதற்குப் பதிலாக ஆலைத் தொழிலை நடத்தக்கூடிய பெரும் முதலாளிகள் அடைந்து வரும் இலாபத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சிமெண்ட் தொழிலில் சுமார் 50 முதல் 60 இலட்சம் வரை மூலதனம் போட்டவர்கள்கூட இன்று கொள்ளை இலாபம் அடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏ. சி. சி., டால்மியா போன்றவர்களும், இன்னும் சாதாரணமாக மூலதனம் போட்டவர்களும் ரிசர்வ் நிதியில் எவ்வளவு சேர்த்து வைத்திருக்கிறார்கள் என்பதற்குப் புள்ளி விவரத்தைப் பல அங்கத்தினர்கள் இதற்கு முன் கொடுத்திருக்கிறார்கள். தேயிலைத் தோட்டத் தொழிலின் மூலம் வெள்ளைக்கார முதலாளிகள் நிறைய இலாபம் சம்பாதித்துப், பணத்தை வெளிநாடுகளுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். தேயிலைத் தொழிலில் முதலாளிகள் கொள்ளை இலாபம் அடிப்பதற்குக் காரணம் என்னவென்றால், அதில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு முதலாளிகள் யாதொரு விதமான வசதியும் செய்துகொடுக்காததுதான். வெள்ளைக்கார முதலாளிகள் இலாபத்தை வெளி நாடுகளுக்கு அனுப்பிக்கொண்டிருப்பதில் அக்கறை செலுத்துகிறார்களே தவிர, தங்களின் கீழ் வேலை செய்யும் தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளுக்கு வேண்டிய மருத்துவ வசதி, வீட்டு வசதி, குழந்தைகளின் கல்வி வசதி, இவைபோன்ற பல வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டியிருக்க, யாதொன்றும் செய்து கொடுக்காமல் இருக்கிறார்கள் என்று நீலகிரியிலிருந்து புகார்கள் வந்திருக்கின்றன. சென்ற ஆண்டில், வெள்ளை முதலாளிகள் ஏராளமான இலாபத்தைச் சம்பாதித்திருக்கிறார்கள். இவர்களுடைய இலாபத்தைச் சர்க்கார் ஏன் கட்டுப்படுத்தக்கூடாது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். பெரும் முதலாளிகளுடைய இலாபத்தைக் கட்டுப்படுத்தி, அளவுக்கு மேற்பட்ட இலாபத்தைச் சர்க்கார் எடுத்துக்கொள்வதின் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை நிறைவேற்றலாம். அப்படிச் செய்தால் மக்கள்மீது வரி போட்டுக்கொண்டிருக்கவேண்டிய அவசியம் இருக்காது என்று நான் யோசனை கூற விரும்புகிறேன். மக்களுக்கு இன்னும் வரி போட்டுக்கொண்டிருந்தால் நிச்சயமாக அவர்களுடைய வாழ்க்கைத்தரம் மேலும் மேலும் கீழேதான் போய்விடும்.

“விவசாய மக்களுடைய வாழ்க்கைத் தரம் எப்படியிருக்கிறது? சாதாரண விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயரவில்லையென்று உறுதியாகக் கூறமுடியும். அரசாங்கத்தார், டாடாவுக்கு ரூ. 10 கோடி கொடுக்கிறார்கள். மற்றும் பல கம்பெனிகளுக்கும் இம்மாதிரி உதவியளிக்கப்படுகிறது. ஆனால், அக்கம்பெனிகளின் நிர்வாகத்தில் அரசாங்கத்துக்கு பங்கு அல்லது (Control) இருக்கிறதா? கிடையாது. இலாபத்தையும் அதிகமாக அடிக்க விட்டுவிட்டுத், தனிப்பட்ட மூல

தனக்காரர்களுக்குக் கடன் கொடுக்கப்படு கிறது. நேற்றுக்கூட மத்திய அரசாங்க நிர் வாகத்தைப்பற்றிப் பேசுகிற காலத்தில் Industrial Finance Corporation-ல் நடக்கும் ஊழல்களைப்பற்றிப பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிருர்கள். அவர்கள் அனுசரிக்கும் முறையைக் கண்டித்துப் பேசியிருக்கிருர்கள். சாதாரண சிறு தொழிலாளிகளுக்குக் கடன் கொடுத்து ஆதரிக்கவேண்டுமே யல்லாது, தொழிலாளிகளுக்குக் குறைந்த சம்பளம் கொடுக்கும் தனிப்பட்ட பெரு முதலாளிகளுக்கு வட்டியேயில்லாமல் கடன் கொடுப்பதை நிறுத்தவேண்டும். தனிப்பட்டவர்களுடைய இலாபத்தைக் கட்டுப்படுத்தித், தொழிலாளிகளுடைய நிலைமையை உயர்த்தி, நிலச்சீர்திருத்தம் கொண்டு வந்தால்தான் நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும். 'ஐந்து வருடத் திட்டம் போட்டுவிட்டோம்; அதை அமுலாக்கப் போகிருேம்' என்று சொன்ஞல் போதாது.

"அடுத்தபடியாக, யாருக்கு வரிபோட வேண்டும்? பெரும்பாலான அளவில் நாட்டில் மக்களுடைய வாழ்க்கையிலுள்ள ஏற்றத் தாழ்வைக் குறைக்கவேண்டும். பெரும்பணம் படைத்தவர்களுடைய வரியை குறைத்துச், சாதாரண மக்களுக்கு வரி ஏற்றப்பட்டுப் பல துறைகளில் அவர்களிடமிருந்து வரி வசூலிக்கும் வழக்கம் நிறுத்தப்படவேண்டும். நிறையப் பணம் படைத்த பணக்காரர்களுக்கு வரி போட்டு ஏழைகளுக்கு வரிபோடாமலிருந்தால் தான், மக்களுடைய வாங்கும் சக்தி பெருகும். தென்னுட்டிலுள்ள விவசாயிகளுக்குத் தான் சம்பளம் மிகக் குறைவு. அகில இந்திய ரீதியில் தயாரிக்கப்பட்ட ஒரு ரிப்போர்ட்டின் படி, பெப்சுவில் பெண்களுக்கு ரூ 1 3/4 சம்பளம். தென்னுட்டில் அவர்களுக்கு ரூ 3/4 சம்பளம். இந்த ரிப்போர்ட்டை நாங்கள் தயாரிக்கவில்லை; இதை மத்திய அரசாங்கம் தாயாரித்திருக்கிறது. வேறு ராஜ்யத்தில் தொழிலாளிகளுக்குச் சம்பளம் ரூ. 4, 5. என்ருல், நம் ராஜ்யத்தில் ரூ. 2-தான். ஆகையால் தொழிலாளிகளுக்கு இலாபகரமான தொழிலை ஸ்தாபிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

காவேரி! இது, நாங்கள் யாரோ, பேசுவதுபோலத் தோன்றுகிறது அல்லவா! காங்கிரஸ், முதலாளிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது; வடநாட்டுக்குத்தான் வளம் கிடைக்கிறது என்ற இந்த இரு கருத்துக்களையும் நாங்கள் பேசும் அளவிலும், முறையிலும், பேசியவர், இப்போது, காங்கிரஸ் உறுப்பினராக டில்லிப் பாராளுமன்றத்தில் கொலு இருக்கிருர். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, காங்கிரசைத் தோற்கடித்த வீரர்; ஏழை பங்காளர் என்ற விருதுபெற்றுச், சென்னை சட்டசபையிலே, எதிர்க்கட்சியிலே உட்கார்ந்துகொண்டு, இப்படிக் கனல்கக்கினுர். இன்று, காங்கிரஸ் கட்சியிலே சேர்ந்துகொண்டு, இன்பம் சுவைக்கிருர். கிடைத்ததைப் பிடித்துக்கொண்டு பிழைத்துப்போகட்டும், நமக்குக் கவலையுமில்லை, நட்டமுமில்லை. ஆனல், உடனே, எங்கள்மீது தாளு பாய்வேண்டும். எங்கள் கழகக்குரலை, தென்னகத்தின் உரிமைக்குரலை, பாராளுமன்றத்திலே சம்பத் எழுப்பியபோது, ஒரு வடநாட்டுக்காரன் எழவில்லை எதிர்த்துப்பேச, இந்த வாழத்தெரிந்தவர்தான் வரிந்து கட்டிக்கொண்டு எழுந்திருக்கிருர், கண்டிக்க; கேலி பேச!

இப்படிப்பட்ட, 'இடம் தேடிகள்'—'மடம் நாடிகள்'— இன்று காங்கிரஸ் கட்சியிலே நிறைய இருக்கிருர்கள். அந்த இடம் எப்படி, இனி உன்போன்ருருக்கு ஏற்றதாக இருக்கமுடியும்!!—என்று கேட்டேன். காவேரியின் கண்களிலே நீர் துளிர்த்தது.

*

அண்ணு! இப்படி மனம் மாறிய காவேரியை நான் பார்க்கவேண்டுமே!!—என்றுதான் கேட்பாய்.

காவேரி—நவபாரதி — இவர்களைக் காணவேண்டுமென்ற ஆவல் நிச்சயம் எழத்தான் செய்யும்.

அவர்கள், தம்பி! இதோ, என் பக்கத்திலேயேதான் இருக்கிருர்கள் — ஆமாம், ஒரே ஒரு காவேரி அல்ல, ஓராயிரம் பேர் இருக்கிருர்கள், காங்கிரசிடம் மனதைப் பறிகொடுத்துவிட்டு, மீண்டுவர மார்க்கமின்றிக் குமுறிக் கிடப்பவர்கள். அவர்களைக் கண்டறிந்து, கருத்தளித்து, அவர்களை நமது இயக்கத்துக்குக் கருவூலம் ஆக்கித்தர வேண்டும் என்று உன்னைக் கேட்டுக்கொள்ளத்தான், ஒரு கற்பனைக் காவேரியைக் காட்டினேன்.

அண்ணன்,

அண்ணாதுரை


## சந்தாதாரர்களுக்கு:

# முக்கிய வேண்டுகோள்

"திராவிட நாடு" இதழுக்குச் சந்தாதாரர்களாக இருக்கும் அன்பர்கள், தங்கள் சந்தா எண்களையும், முகவரிக்குக் கீழே குறிப்பிட்டிருக்கும் முடிவு தேதியையும் அன்புகூர்ந்து சிரமம் பாராது உடனே தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிருேம்.

பொறுப்பாளர்.

# தீயும் தென்றலும்

டி.கே.சீனிவாசன்

## 1

**விழா** முடிவடைகிற நேரம். தலைவர் முடிவுரை இன்னும் முடியவில்லை. அதற்குள் அத்தனை மாணவிகளுக்கும் என்னதான் அவசரமோ தெரியவில்லை; எப்போது முடியும் என்று ஏங்கிக் காத்திருந்ததைப் போலப் புறப்பட எழுந்தனர். கட்டாக அடுக்கப்பட்ட புத்தகங்கள் காற்றோடு போய்விடுமோ என்ற அச்சத்தால், அவற்றின்மேல் வைக்கப்பட்ட சிறு பெட்டி, எதிரே மேசைமேல் இருந்தவை அனைத்தும் இரு கைகளுக்கும் தாவின. அடுக்கடுக்காக நடப்பட்டிருந்த மலர்ச் செடிகள் வரிசை குலைந்தன. கொட்டிக் குவிக்கப்பட்ட மொக்குகளும், மலர்களும் அந்தக் கூடம் முழுதும் நிறைந்தன. கேட்டுக்கொண்டிருந்தவர்கள்பேசத் தொடங்கினர். குருவிக்கூட்டைத் திறந்துவிட்டதைப்போல ஒரே கூச்சல். முடிவுரைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியதாயிற்று. கொத்துக்கொத்தாக நகர்ந்தனர் அந்த மாணவிகள். ஒளியும் ஒலியும் ஒன்றுபட்டு உச்ச நிலையில் உறவாடின அந்த உருவங்களிடம்.

நடந்து சென்றுகொண்டிருந்த அந்தக் கூட்டத்துக்கு நன்றி தெரிவித்து முடித்தாள், மன்றச் செயலாளர் பத்மாவதி. இவள் பேச்சைப் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த நாற்காலிகளும், மேசைகளும் அவளைப் பார்த்து ஏளனம் செய்தன. திரும்பிக்கூடப் பார்க்காமல் சென்றுவிட்ட தன் தோழிகள் மேல்அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது, திட்டலாமா என்று நினைத்தாள். ஆனால்...... நடந்தது திருக்குறள் விழா... வேதனையை வெளியிட்டால், நடத்தப்பட்ட விழாவுக்கு மதிப்பிருக்காதே என்ற எண்ணத்தால் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டாள்.

பின்னால் திரும்பிப்பார்த்தாள். வயதான இரு ஆசிரியைகள், காலியான இடத்தைக் கவலையோடு பார்த்துக்கொண்டு நின்றனர். தாறுமாறாகக் கிடந்த நாற்காலிகளும், மேசைகளும் தவிர்க்கமுடியாத தொல்லைகளாக அவர்களுக்குத் தோன்றின போலிருக்கிறது. இவளும் தங்களைத் தனியே விட்டுச் சென்றுவிடுவாளோ என்ற கவலை அவர்கள் பார்வையில் காணப்பட்டது. தளர்ந்துபோன வயதில் பளுவான சாமான்களை நகர்த்திவைத்து அந்த இடத்தை ஒழுங்குபடுத்துவது என்பது...... நினைவுகளாகவும், கனவுகளாகவுமே அவர்களிடம் எஞ்சியிருந்த இளமை, சிந்தித்துப் பார்ப்பதைவிடச், செய்து முடிப்பதுதான் சிரமம், என்பதை அவர்களுக்கு உணர்த்திற்று.

“உங்களுக்கு நான் உதவி செய்யட்டுமா, டீச்சர்?” என்று அவர்களைப் பார்த்துக் கேட்டாள், பத்மா.

அந்தஆசிரியைகள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

“உனக்கு மட்டும் நேரமாகவில்லையா, பத்மா?” என்று கேட்டாள் ஒரு ஆசிரியை.

“ஆகிறது... இருந்தாலும்...உங்களால்... தனியே...” இணைப்பில்லாமல் துண்டு துண்டாக வெளிப்பட்ட அந்தச் சொற்களை வெறும் ஒலியாலேயே உருவமாக்க முயன்றாள் பத்மா.

“அதற்குள் அத்தனை குட்டிகளும் பறந்துவிட்டார்களே!”

எச்சிலைத் துப்புவதைப்போல மனதில் நிறைந்திருந்த எரிச்சலைக் கக்கினாள் அந்த ஆசிரியை.

இதைக் கவனித்ததாகவே பத்மா காட்டிக்கொள்ளவில்லை. அலங்கோலமாகக் கிடந்த நாற்காலிகளையும் மேசைகளையும் அவசரம் அவசரமாக ஒழுங்குபடுத்தத்தொடங்கினாள்.

அந்த ஆசிரியைகள் பத்மாவோடு சேர்ந்து அவைகளைத் தூக்கிப் பார்த்தனர்; பிறகு தொட்டுக் காட்டினர்; சிறிதுநேரத்தில் தூர விலகிக்கொண்டனர்.

“நல்ல வேளை, இப்படியே இடத்தைவிட்டுப் போயிருந்தால் நாளை காலை நம்மேல் எரிந்துவிழும் அந்தக் கிழக் கோட்டான்.”

தலைமை ஆசிரியையைப் பற்றித்தான் அந்த ஆசிரியை கூறினாள். அத்தோடு அவளுடைய கோபம் தணிந்துவிடவில்லை; தொடர்ந்தாள்—

“நாற்பது வயதாகிறது. நளினியாம்.... நளினி! பெயரைப்பார்!”

இன்னொரு ஆசிரியையால் இதற்குமேல் பொறுக்கமுடியவில்லைப் போலிருக்கிறது.

“அவளுக்குப் பெயர் வைக்கும்போது வயது நாற்பதாக இருந்திருக்காது; நான்கு மாதக் குழந்தையாக இருந்திருப்பாள். சிறு வயதில் அவள் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டே எத்தனையோ பேர் சுகங் கண்டிருப்பார்கள். என்னதான் இருந்தாலும், வயதான காலத்தில்

நளினி என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பதற்கே வெட்கமாகத் தான் இருக்கிறது.''

பெண்களிடம் உருவாகும் மன உணர்வுகளுக்கு எப்போதும் வயதே ஆவதில்லை என்பதை எடுத்துக் காட்டிற்று அவர்கள் உரையாடல்.

"எல்லாம் முடிந்துவிட்டது, டீச்சர்!'' என்று சொல்லிக்கொண்டே, பேசிக்கொண்டிருந்த இருவரையும் பார்த்தாள் பத்மா.

"நீ மிகவும் நல்ல பெண், அம்மா. இங்கே படிக்கிறார்களே, அவர்கள் எல்லாம் பெண்களா?'' என்று சொல்லிவிட்டு, உதட்டைப் பிதுக்கினாள் ஒரு ஆசிரியை.

இன்னொருத்திக்கு இது பிடிக்க வில்லைப் போலிருக்கிறது.

"ஏன்? சந்தேகப்படும்படி என்ன ஆகிவிட்டது?'' என்று கேட்டாள்.

அந்தக் கேள்வி, சொன்னவளுக்குச் சிரிப்பை உண்டாக்கியது; பத்மாவுக்கு, விரசமாகத் தோன்றியது. நகைச்சுவை ஓரளவு உப்புக் கரிப்பதை உணர்ந்தாள் அவள். அரும்புகிற இளமைக்கும், அனுபவப் பட்ட முதுமைக்கும் இடையே, எதிலும் ஆழமான பள்ளத்தாக்கு இருக்கும் என்பதை அவள் அறியமாட்டாள். எப்படியும் அங்கிருந்து உடனே போய்விடவேண்டும் என்ற எண்ணந்தான் ஏற்பட்டது அவளுக்கு. அதற்குள் அடுத்த ஆசிரியை பேசத் தொடங்கிவிட்டாள்.

"பெண் என்றால் பொறுமையும், பொறுப்பும் இருக்கவேண்டும். அப்படியே எல்லாவற்றையும் போட்டுவிட்டு அத்தனைபேரும் ஓடிவிட்டார்களே''!

"தவறு அவர்கள்மேல் இல்லை. அடிமைப்பட்டிருந்த பெண், உரிமை பெறும்போது, ஆதிக்கஞ் செலுத்திய ஆணைப் பார்த்து அவன் நடக்கிறபடியெல்லாம் நடக்க நினைக்கிறாள். அதனால்தான், நல்ல பண்புகளுக்கு மாறாக நாசந்தரும் பழக்க வழக்கங்கள் அவளிடம் படிகின்றன.''

நேரம் அதிகமாகிவிட்டது என்பதைப் பத்மாவுக்கு உணர்த்திற்று கடிகாரம்.

"நான் வருகிறேன், டீச்சர்'' என்று விடை கேட்டாள்.

"இரேன் பத்மா. தலைமை ஆசிரியையை வீட்டில் கொண்டுபோய் வீ[illegible] போயிருக்கிறான் பியூன். அவன் வந்தவுடன் நாம் எல்லோரும் [illegible].''

"இல்லை டீச்சர், விரைவில் நான் வீட்டுக்குப் போகாவிட்டால், அப்பா என்னைத் தேடிக்கொண்டு இங்கே வந்துவிடுவார்.''

"அப்படியானால் போய் வா, அம்மா'' என்று இரு ஆசிரியைகளும் ஏக காலத்தில் விடை கொடுத்தனர்.

அந்த அறையை விட்டு வெளியே வந்த பிறகுதான் பத்மாவிடம் அச்சம் தலை தூக்கிற்று. அரவம் அடங்கிப்போன அந்த நேரத்தில் ஆள் நடமாட்டம் அதிகமாக இருக்காது என்பதை அவள் உணர்வாள். இது வரை இரவு நேரத்தில் தனியே போய்ப் பழக்கப்படாத அவளுக்கு, அந்த எண்ணமே என்னவோ போலிருந்தது. காலத்தைக் கழிப்பதற்காக அவள் படித்திருந்த கற்பனைக் கதைகளும், பொழுதைப் போக்குவதற்காக அவளோடு பேசிக் கொண்டிருந்த மாணவத் தோழிகளும், இரவு நேரத்துக்கென்றே ஒதுக்கப்பட்டிருக்கும் இக்கட்டான நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டியிருந்தது அவள் நினைவுக்கு வந்தது. இவற்றையெல்லாம் எண்ணாமல் வீட்டுக்குச் சென்றாலும், துணையில்லாமல் வந்ததற்காக அவளுடைய அப்பா கோபித்துக்கொள்வார். விழா முடிவதற்குள்ளாகவே வீட்டுக்குப் போன மாணவிகள், எவ்வளவு விவேகம் நிறைந்தவர்கள், என்று நினைக்கத் தொடங்கினாள் பத்மா.

நடுங்கச் செய்த நினைவுகளை நகர்த்தி ஒதுக்க முயற்சித்துக் கொண்டே வெளியே வந்தாள் பத்மா. பள்ளிக்கூடத்தின் காம்பௌண்ட் சுவர் ஓரமாக ஒரு உருவம் — பெண்ணுருவந்தான் — இருளில் மறைந்துகொண்டு தெருவைப் பார்த்தவண்ணம் நின்றது. அவள், துண்டித்து விடை கொடுத்தனுப்பிய அச்சம், மறுபடியும் அவள் உள்ளத்தில் தொத்திக்கொண்டது. கூர்ந்து கவனித்தாள். அவளுடைய வகுப்புத் தோழி விமலா! வேறு எவராவது வெளியே நிற்கிறார்களோ என்ற சந்தேகம் தோன்றியது அவளுக்கு. மெல்ல விமலாவை நோக்கி நடந்தாள் பத்மா.

"என்ன விமலா?'' என்று பத்மா கேட்டவுடன், பதறிவிட்டாள் விமலா. பயந்து அவள் வெளியிட்ட ஓலம் பத்மாவையே நடுங்கச் செய்தது.

"யாராவது அங்கே நிற்கிறார்களா?'' என்று கேட்டாள் பத்மா.

"இல்லை. எவருமில்லை''.

பத்மா எட்டிப்பார்த்தாள். எவருமே இல்லை.

"தனியாகப் போகப் பயமாக இருக்கிறதா? வா, போகலாம்,'' என்று விமலாவின் கையைப் பிடித்து இழுத்தாள்.

"உன்னோடு வேகமாக நடக்க என்னால் முடியாது. பாதி தூரத்தில் என்னை விட்டுவிட்டு நீ போய்விடுவாய். பிறகு......நான்......'' என்று சொல்லிவிட்டு, ஏக்கத்தோடு பத்மாவைப் பார்த்தாள் விமலா.

"உனக்காக இன்று மெள்ள நடக்கிறேன். போகிற வழியில் தானே உன் வீடு இருக்கிறது. வா, போகலாம்''.

## பகுத்தறிவுப்பாதையில் பண்டித நேரு

"இந்தியா, தொழில் மயமான ஒரு சமுதாயமாக மாறி வருகிறது என்பதில் யாருக்கும் ஐயப்பாடு இருக்கமுடியாது. இத்துறையில், முன்னேற்றம் காணுவதற்கு ஐந்து, பத்து, இருபது ஆண்டுகள்கூட ஆகலாம். என்றாலும் நம் முன்னே உள்ள பிரச்சினை தொழில் முன்னேற்றத்தில் வளர்ச்சி காணுவது ஒன்றுதான். இத்துறையில் முன்னேற்றம் காணவேண்டுமானால், பழைய சம்பிரதாயங்களையும், பழக்க வழக்கங்களையும் கைவிட்டு விட்டு வேகமாக மாறிவரும் உலகத்திற்கு ஏற்ற வகையில் நாம் நடந்துகொள்ளவேண்டும்."

"இந்திய மக்கள் அளவுக்கு மீறிய பழமை எண்ணங்களைக் கொண்டவர்களாகவும், மதத்தில் ஊறிப்போனவர்களாகவும் இருந்த காரணத்தாலேயே இதுகாறும் இந்தியாவின் முன்னேற்றம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுவிட்டது."

"பழக்க வழக்கங்களில் நல்லவைகளை மக்கள் வைத்துக்கொள்ளட்டும். ஆனால், காலத்துக்கு ஒவ்வாத தீயவைகளைத் தயவு தாட்சண்யமின்றித் தூக்கியறியவேண்டும்."

"மக்கள் மேற்சொன்னவைகளைக் கடைப்பிடித்து தொழில், விஞ்ஞான அறிவு பெற்றுவிடுவார்களானால், முன்னேற்றம்அடைந்து வரும் இந்தியா மேலும் எல்லாத் துறைகளிலும் வெகுவாக முன்னேறிவிடும்."

அகமதாபாத் நகரத்தில் நடைபெற்ற 18-வது அகில இந்திய பஞ்சாலை மாநாட்டினைத் துவக்கி வைத்த இந்தியத் துணைக்கண்டப் பிரதமர், பண்டித ஜவகர்லால் நேரு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இரு தோழிகளும் புறப்பட்டனர். எவ்வளவோ பேசவேண்டிய விஷயங்கள் இருப்பதுபோல அவர்களுக்குத்தோன்றிற்று. ஆனால், ஒன்றைக் கூட வெளிப்படுத்த அவர்களால் முடியவில்லை. மௌனமாக நடந்தனர்.

ஆழமாகப் பதிந்த காலடிச்சுவடுகள்—நீளமாக இருந்த சக்கரங்கள் பதித்த கோடுகள் — படுத்திருந்த விலங்குகள் உருவாக்கிய பள்ளங்கள் — காலையிலிருந்து, அந்தநேரம் வரை தன்னைக் கடந்தவைகளைப் பதியவைத்திருந்தது அந்தத் தெரு. இடையிடையே, இருளுக்கும் இடமொதுக்கிவிட்டு, வெகுதூரத்துக்கு வரிசையாக நின்றன ஒளிவிளக்குகள். வெகுதொலைவுக்கப்பால் நிழலுருவங்களாக மனிதர்கள் நடமாடிக்கொண்டிருப்பது போலத் தோன்றிற்று. விளக்குகள் நிலத்தை நோக்கித் தலைகுனிந்துகொண்டிருந்ததால், உயர்ந்த கட்டிடங்களின் மேல்பாதி இருளில் புதைந்திருந்தது. நடந்து செல்லும்போது ஒவ்வொரு விளக்குக்கும் இடையில் நீண்டு குறுகி இருந்த இடந்தெரியாமல் மறையும் தங்கள் நிழல்களைப் பார்த்துக்கொண்டே நடந்தனர், இருவரும்.

தெருத்திண்ணைகளில் பலர் உருண்டுகிடந்தனர்; ஒருசிலர் உரையாடிக்கொண்டிருந்தனர். படுத்திருந்த நாய்கள் தலையைத் தூக்கிப் பார்த்துவிட்டுத் திரும்பத் தூக்கத்தைத் தொடர்ந்தன. ஓரிரு குரல்களை இடையிடையே எழுப்பித் தாங்களும் இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொண்டன பறவைகள். எதிரே, தெருவில் எரிந்துகொண்டிருந்த மின்சார விளக்குகளோடு தங்களால் போட்டிபோட முடியவில்லையே என்று அழுதுகொண்டிருந்தன, இடையில் குறுக்கிட்ட சிறு அங்காடிகளில் மாட்டப்பட்டிருந்த மண்ணெண்ணெய் விளக்குகள்.

இடையில் குறுக்கிட்டது ஒரு திரைப்படக்கொட்டகை. உள்ளே ஆட்டம் நடந்துகொண்டிருந்தது. வெளியே மூடப்பட்டிருந்த கம்பிக் கதவைப் பிடித்துக்கொண்டு சிலர் நின்றுகொண்டிருந்தனர். தின்பண்டங்களை வண்டியில் வைத்துவிற்கும் ஆள் ஒருவன், பீடியைப் புகைத்துக்கொண்டே இவர்களைப் பார்த்தான்.

அந்தத் தெருக்கோடிக்கு வந்ததும், விமலா திரும்பி வந்த வழியை ஒருமுறை வேவுபார்த்தாள். அடுத்த தெருவுக்குள் புகுந்தனர் இருவரும்.

தெருவின் தொடக்கத்தில் இருந்த பூங்கா, தான் மலர்ந்திருப்பதை அவர்களுக்குத் தெரிவித்தது. உலாவிக்கொண்டிருந்த காற்றோடு உறவாடிய மணம் பத்மாவுக்கு மகிழ்ச்சியை அளித்தது, பூங்காவின் ஓரமாக...ஒரு உருவம்...ஆண் உருவந்தான் அது என்பது தெரிந்தது. நெஞ்சுக்குள் குதிரை ஓடுவதைப் போல் உணர்ந்தாள் பத்மா; ஓடவேண்டும்போலிருந்தது அவளுக்கு. ஆனால், விமலாவுக்கு கொடுத்த வாக்குறுதி...? மனதை அந்தப்பக்கமும், விழிகளை வேறுபக்கமுமாகப் பிரித்துக்கொண்டு நடந்தாள்.

தணிவாகச் சீட்டியடிக்கும் ஓசை; தவித்துப்போனாள் பத்மா. தலை குனிந்துகொண்டே வேகமாக அடியெடுத்து வைத்த விமலாவைப் பார்த்ததும், அவளுடைய அச்சம் அதிகரித்தது.

"விமலா!"

அந்த ஆண் அழைக்கும் குரல்; காதில் விழுந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை விமலா.

"விமலா!"

குரல் கொஞ்சம் வலுத்தது. பத்மா திரும்பிப்பார்த்தாள். யாரோ ஒரு இளைஞன்—நாகரிகமாக உடுத்திக்கொண்டிருந்தான் — ஒளி மங்கியிருந்ததால், அவன் முகம் தெளிவாகத் தெரியவில்லை.

"உன்னை யாரோ கூப்பிடுகிறார்கள், விமலா," என்று மெல்ல அவளுக்குத் தெரிவித்தாள் பத்மா.

தவித்துக்கொண்டே திரும்பிப் பார்த்த விமலா, தடுமாறிக் கொண்டே, "யாரோ தெரியவில்லை" என்றாள்.

"தெரியவில்லையா!"

கோபம் நிறைந்திருந்தது அந்தக் குரலில். அதைத் தொடர்ந்து அவன், அவர்களை வேகமாக நெருங்கினான். அயர்ந்து நின்றுவிட்டாள் பத்மா. ஓடத் தொடங்கினாள் விமலா. அவளைத் துரத்திப்பிடித்து நிறுத்தினான் அவன்.

"விடுங்கள், அவள் கையை" என்று உரத்துக் கூவினாள் பத்மா.

அவன், இவளைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. விமலாவை வீதியோரத்துக்குப் பிடித்திழுப்பதிலேயே கவனம் செலுத்தினான்.

"ஐயோ, ஐயோ!" என்றுஅலறத் தொடங்கினாள் விமலா.

அதற்குமேல் பத்மாவால் சும்மா இருக்கமுடியவில்லை. தன் தோழியின் கையைப் பிடித்து அவளை விடுவிக்க முயன்றாள்.

"சீ! நீ போ அப்பால்" என்று அவளை அப்பால் தள்ளிவிட்டான் அந்த இளைஞன்.

அனாதையாகக் கிடந்த அந்தத் தெருவின்மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது பத்மாவுக்கு. ஓடித் தேடினால்கூட விரைவில் எவரையும் அழைத்துவர முடியாது. என்ன விபரீதம் ஏற்பட இருக்கிறதோ என்ற பயம் அவளை எரித்து வாட்டியது.

(தொடரும்)

4-ம் பக்கத் தொடர்ச்சி

அந்த இக்கட்டான வேளையிற் கூட வீட்டுக்காரரின் அதிகாரக் குரல் அங்கே தலைகாட்டிற்று.

"நான் போய் அழைத்து வருகிறேன் மருத்துவரை."

அவன் தெளிவான குரலில் அழுத்தமாகச் சொன்னான்.

வீட்டுக்காரர் மலைத்தார். மருதனின் காலில் வீழ்ந்து வணங்க வேண்டும் என்று அவர் உள்ளம் விழைந்தது. அதை அவர் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

"போய்வா, போய்வா! உடனே கிளம்பு", கைவிளக்கை அவனிடம் நீட்டினார். குடை எடுத்துவர உள்ளே ஓடினார்.

கைவிளக்கை மட்டும் வாங்கிக் கொண்டான் மருதன். குடை அவனுக்கு வேண்டுவதில்லை. அதைச் சொல்லிக்கொள்ள அங்கே அவன் நிற்கவுமில்லை. கிளம்பினான்— விரைந்தான்.

எங்கே உண்மையான அன்பு மனமும், அருள் மனமும் உள்ளனவோ, அங்கே அச்சம் இல்லை. அந்த அஞ்சாமை தரும் துணிச்சலே மெய்மெய்த் துணிச்சல். அந்தத் துணிச்சல் முன் மற்றவை எல்லாம் அற்பம், அற்பம், அற்பம்!

அதோ விரைகிறான் மருதன் தன்னை மறந்து, பிறிதொரு உயிரைக் காக்கும் முனைப்போடு.

இன்னும் மழை விடவில்லை; பெய்துகொண்டிருக்கிறது. காற்று ஓயவில்லை. சுழன்று சுழன்று வீசிக் கொண்டிருக்கிறது. மின்னல் மின்னுகிறது. இடி முழங்குகிறது.

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15
இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# எகிப்தின் கபிலர்!

—(ஆர்வி)—

## அன்று:

வெஞ்சினத்தால், சூதுமதியால், மாற்றார் மன்னனைத் தாக்கினர்! போரில் வேலேந்திய நெஞ்சு சாய் மண்ணில் வீழ்ந்தான் மலை நாட்டு மன்னன் பாரி! அவன் அரசு பறித்தனர் பகைவர்! மன்னன் பெற்ற மாணிக்கங்கள் யாருமற்றவராயினர்!

அரண்மனையில் உலவிய அரசிளங் குமரிகள் ஆரணியம் கண்டனர்! கொலு மண்டபத்தில் வீற்றிருந்த குணவதிகள் குடிசை கண்டனர்! மான்விழியாய், மதிமுகமாய், அன்ன நடையாய்—இருந்த ஆரணங்குகள்—விழியில் நீர்முட்ட; சோக முகமாகித், தளர்ந்த நடையாய்—பின் தொடர்ந்தனர் பாவலனை நோக்கி!

அரண்மனையில் இலக்கியம் பயில வேண்டிய கொற்றவன் பெற்ற பாவைகள், குடிசையில் பாடம்பயின்றனர்! சிற்றரசன் மடியில் தவழ வேண்டிய பூங்கொடிகள் வாழ்வு இழந்து வாடினர்!

தந்தையை வீழ்த்திய வஞ்சகம்,—வாழ்விலே அடைந்த ஏமாற்றம்—பாவலன் ஊட்டிய உணர்வு—பாரி மகளிரைப் பாடவைத்தது!

"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையும் உடையோம் எம்குன்றும்
பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்
வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும்
இலமே!"

பாரி மகளிர் பாடிய இந்த வரிகள் தமிழர் நெஞ்சத்தை — இலக்கியம் கற்றவர் உள்ளத்தை—உருக்குவனவாகும்!

இந்தப் பாடலில் தமிழ்ச் சுவையை உணர்கிறோம்; பாரி மகளிர் அடைந்த துன்பத்தைப் பார்க்கிறோம்; தமிழர் வீரத்தைப் போற்றுகிறோம்; ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் ஆண்ட தமிழ் பரம்பரையைக் காண்கிறோம்—இது அன்று!

## இன்று:

பஞ்சு மெத்தையில் தாதி படுத்திருக்கிறாள். வலதுகைப் பக்கம் ஒரு குழந்தை, இடதுகைப் பக்கம் ஒரு குழந்தை — இரு குழந்தைகளும் தாதியைஅணைத்துக்கொண்டு படுத்திருக்கின்றன! குழந்தைகள் தாதியை மிரள மிரளப் பார்த்துத் தேம்பி அழுகின்றன. குழந்தைகள் மட்டுமா — தாதியும் குழந்தைகள் துயர் கண்டு கலங்குகிறாள்! இரண்டு குழந்தைகளையும் தன் மார்பில் சாய்த்துக்கொண்டு முதுகில் தட்டிக் கொடுக்கிறாள்!

பளபளக்கும் கருநிற மேனிதான் அக் குழந்தைகள்! ஆனால், உள்ளம் பனித்துளி! பால் வண்ணம்! எதையும் அறியாப்பருவம்!

தாதியின் அணைப்பில் கட்டுண்ட குழந்தைகள் — அவள் அணைப்பிலிருந்து விடுப்பட்டு அவளைப் பார்க்கின்றனர். விழியில் அருவி எனக் கண்ணீர் இரு குழந்தைகளிடத்தும்!! இதைக்கண்ட தாதியின் விழிகள் குளமாகின்றன! யார் யாரைத் தேற்றுவது என்ற நிலையில் அவர்கள்!

பின்னர் தாதி அமைதி பெறுகிறாள். குழந்தைகளைப் பஞ்சணையில் அமர வைக்கிறாள்! திண்பண்டங்களைக் குழந்தைகளுக்கு வழங்குகிறாள்! அன்புமொழி கூறி ஆறுதல் உண்டாக்குகிறாள்! குழந்தைகளே! அதோ பாருங்கள் நிலா! முழுநிலா! என்று நிலவு காட்டி வேடிக்கை செய்கிறாள்! குழந்தைகள் அமைதி அடைகின்றன. தாதியிடம் புன்னகை காட்டுகின்றன! இதுதான் சமயம் என்று குழந்தைகளைப் பஞ்சணையில் படுக்கவைக்கிறாள்! அன்புச்செல்வங்களே! நான் இப்பொழுது கதை ஒன்று சொல்வேன், கேட்டுக் கொண்டே தூங்கிவிடவேண்டும் என்று கட்டளை இடுகிறாள் தாதி!

யாருக்கு? எந்தக்குழந்தைகளுக்கு தாதி கதை சொல்கிறாள்?

விடுதலை வீரனைத் தந்தையாகப் பெற்ற — தந்தை களம் செல்லப் பாதை அமைத்து தந்த வீர அன்னையின் அமுதைப் பருகிய — தங்கச் சுரங்கம் காணும் எங்கும் என்ற பொன்னாட்டைப் பெற்ற குழந்தைகளுக்கு!

கருநிறத்தழகன்—விடுதலை வீரன்—அறிவழகன்—காங்கோ நாட்டு நாயகன்—பாட்ரிஸ் லுமும்பா பெற்ற அருமைச் செல்வங்களுக்கு!

தந்தையை இழந்து—பெற்றஅன்னையைப் பிரிந்து — பிறந்த பொன்னாட்டை மறந்து — எகிப்து மண்ணிலே கண்ணீர்த்துளிகளுடன்! விம்மும் நெஞ்சாய்! வேதனைஉள்ளத்தோடு!!

நீங்கள் மட்டுமா பாரி மகளிர்!! இதோ பார்! எங்களைப் பார்! கேளிர் எங்கள் கதையை!! என்ற நிலையில்! இது இன்று!

[எகிப்தின் அதிபர் நாசர், காங்கோ அதிபர் லுமும்பா பெற்ற இரண்டு குழந்தைகளைத் தன்பாதுகாப்பில் வளர்த்து வருவதாகச் செய்தி வெளியாகி உள்ளது. தந்தையை இழந்து, அரசை இழந்து, எதிரிகள் சூழ்ந்த நேரத்தில்—பாரி மகளிருக்குக் கரம் நீட்டினார் புலவர் கபிலர்! அதேபோல்—தந்தையை இழந்து — தாயைப் பிரிந்து—கொடியவர்களின் பிடியிலிருந்து லுமும்பா பெற்ற இரு குழந்தைகளைக் காப்பாற்றும் நாசர் எகிப்தின் கபிலராகிறார்!]

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.